www.tamilarangam.net


Vol.2;Nr.9;Nov.-Dec.1995

Sarvadesa Tamiler:

ISSN.0805-7443

# சர்வதேசதமிழர்

தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை



வாசகர்கட்கு எம் இனிய கிறிஸ்மஸ்,புதுவருட வாழ்த்துக்கள்!



சிங்கப்பூர் ஆசியாவுக்கே உதாரணம்!




பாங்கொக் மகாமாரிஅம்மன் ஆலயம்



பாங்கொக்கில் தமிழர்!



உள்ளே: மாஸ்கோவில் எனது மறக்கமுடியாத அனுபவங்கள் - க. சபாரத்தினம்
அமெரிக்க ஜனாதிபதிக்கு ஒரு முக்கியமான கடிதம்!
தென்ஆபிரிக்காவிலிருந்து — திருமதி. கமலா வேலுப்பிள்ளை
குப்பைக்கவிஞரின் கருத்தாளபேட்டி — மதுரை கவிச்சுடர் சு. இலக்குமணசுவாமி
தமிழர் கருத்தில் நல்லுலகம் — டாக்டர் யோகாம்பாள் சுந்தரம்,கேரளா
பாங்கொக்கிலிருந்து — வே. நாகராஜா
தென்கிழக்காசிய பயண அனுபவங்கள் — என்னவம்பிரா
பனிப்பூக்கள் — காரையூரான் இதயாகலிங்கம்
மறக்கமுடியாத மனைவரும் — பேராசிரியர் பீற்றர் சால்க்



செ. நாகேந்திரன். லண்டன்

**Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள்/நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்,ஜ.றோயலா துறொண்கைம்:த.தியாகலிங்கம்
ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன்ஏககண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா: வார்டோ:

## மாஸ்கோவில் எனது மறக்க முடியாத அனுபவங்கள்!

**ஆரையம்பதி க.சபாரத்தினம்**

வெளிநாட்டவர்களைப் பொறுத்தவரை ரஷ்யாவில் நிலைமை பாரதூரம் என்றே கூறவேண்டும்.அவர்களது உயிர்,உடமைகட்கு உத்தரவாதமே கிடையாது.வெளிநாட்டவர் பலர் வழிப்பறி,கொள்ளை,அடிதடி கொலைகட்கு ஆளாக்கப்பட்டும், தகுந்த பாதுகாப்புகளை ரஷ்யஅரசு மேற்கொள்ளவில்லை.தற்போது வெளிநாட்டவர் தம் உபயோகத்திற்காக வைத்திருக்கும் தரமான, விலையுயர்ந்த மோட்டார் வாகனங்கள்,பட்டப்பகலில் கொள்ளையிடப் படுகின்றன.

பலவெளிநாட்டுப்பிரமுகர்களும்,இராஜதந்திரிகளும் தொடர்ச்சியாக செய்துகொண்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து,இப்போது அரசு பொலிஸ்படைப்பிரிவில் வெளிநாட்டவர் பாதுகாப்பு படை ஒன்றைத்தோற்றுவித்துள்ளதாம்.ஆயினும் திருடனே பார்த்து திருந்தாவிட்டால்,இத் திருட்டை ஒழிக்கமுடியாது தான்! காரணம் வேலியே பயிரை மேய்ந்த கதை தான்.

திரு.விளாதிமிர் அவர்கள் புதிதாக பொலிஸ்அதிகாரியாக நியமனம் பெற்றவர்.புறஸ்பெக்ட் மீரா,இல.15ல் இவரது செயலகம் அமைக்கப்பட்டு அதற்குப்பொறுப்பதிகாரியாயும், இருந்து செயலாற்றிவருகிறார்.

ஒருநாள் திடீரென அவரிடமிருந்து ஒரு தொலைபேசிஅழைப்பு வந்தது.

-இலங்கைப்பிரசை ஒருவர் தகன்ஸ்காயா மெற்றோஸ்ரேசன் அருகாமையில் உள்ள வீடொன்றின் முன்பாக கத்திக்குத்துக்காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டு,அவரை அப்பகுதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளோம். இது பற்றிய சாட்சியங்களைப்பதிவு செய்வதில் மொழிச்சிக்கல் இருப்பதால் தூதரகம் எமக்கு உதவவேண்டும்.

எமது தூதரகத்துக்கு சொந்தமான கார்களில் ஒன்று மேஷடஸ் பென்ஸ்,இது தூதரின் உத்தியோக உபயோகத்திற்கு மட்டும். மற்றது ஏசஸ்வான் வண்டி,இது பிறதேவைகள் அனைத்துக்குமாகும்.

வான் அன்று ஏதோ அலுவல் நிமித்தம் வெளியே போய்விட்டபடியால், -பயணஒழுங்கு தந்தால் இங்கிருந்து அதிகாரி ஒருவரை அனுப்பலாம்-என்ற தூதரகத்தின் பதிலை ஏற்று பிற்பகல் 2.30மணிக்கு பொலிஸ்வண்டி ஒன்றில்,திரு.விளாதிமீரும்,தகன்ஸ்காயா பொலிஸ்பிரிவு அதிகாரியும் வந்தனர்.

கலினா எனும் பெண்மொழிபெயர்ப்பாளரும்,நானும் அவர்களுடன் புறப்பட்டுச்சென்றோம்.நேராக தகன்ஸ்காயாபொலிஸ்நிலையம் சென்றோம். அங்கே பரிச்சயமானதமிழர் ஒருவர் இருப்பதைக்கண்டு ஆச்சரியம் அடைந்தேன். முன்பு வசந்தா செல்வராசாவின் விவகாரத்தில் என்னுடன் வாதிட்ட,அதே மதனேதான். மதன் சோர்ந்த வதனத்திடையேயும் ஒரு மெல்லியபுன்முறுவலை அவிழ்த்துவிட்டார்.பதிலுக்கு நானும் மகிழ்ச்சியை தெரிவித்தேன்.

கத்திக்குத்துக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வரும்,மரியசீலனும்,மதனும் ஒரே வீட்டில் தங்கிஇருப்பவர்கள்.இதனால் சாட்சியம் பெறுவதற்காக மதனைப்பொலிசார் அவ்விடம் அழைத்துவந்திருந்தனர் போலும்.மதனுக்கு வேற்றுமொழி எதுவும் புரியாதபடியால் நாங்கள் முதலில் அங்கு அழைத்துச்செல்லப்பட்டோம்.

கரியநிறமான,திடகாத்திரமான,இளைஞன் ஒருவன் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தான்.அடிவயிற்றில் ஆழமான கத்திக்குத்து ஏற்பட்டதனால் இரத்தம் பெருமளவு வெளியேறி இருக்கவேண்டும்.புரண்டு படுக்கவோ,எங்களுடன் கதைக்கவோ அவனுக்கு சிரமமாக இருந்தது. ஓரளவு ரஷ்யன்,ஆங்கில அறிவு இருந்ததால் அவனுக்கு சமாளிக்கக்கூடியதாக இருந்தது.

பொலிசார் கேட்ட கேள்விகட்கு,பெரும்பாலும் எனது ஒத்திழைப்பின்றியே கலினாவின் ஒத்தாசையோடு,வாக்குமூலம் அளித்தான்.ஓரிரு தடவைகள் மட்டும் அவனுக்குப்புரியாது இருந்தகுழப்பமான கேள்விகளை விளக்கவே அங்கு என்பணி தேவைப்பட்டது.

மாஸ்கோவில் தான் குடியிருந்த அந்தப்பகுதியில் வாழ்ந்துவந்த ரஷ்ய இளைஞர்களோடு சேர்ந்து குதூகலிப்பது,கைப்பந்துஆடுவது போன்ற பொழுதுபோக்குகளில் ஈடுபடுத்திவந்தான்,மரியசீலன்.இதனால் நல்ல நட்புறவை மட்டுமல்லாமல், ரஷ்யமொழியறிவையும் அவன் கூடவே வளர்த்துக்கொண்டான்: சிலகாலம் கல்லூரி ஒன்றில் ரஷ்ய மொழி கற்றதாகவும் கூறினான். மரியசீலனின் சொந்தஇடம்,யாழ்ப்பாணம்,பாசையூர்!

சம்பவம் நடந்தஅன்று,இரவு 9.00மணிவரை கைப்பந்தாடிவிட்டு,சூரியன் மறைவிற்குப்பின் களைப்புடன் வீடுதிரும்பிய மரியசீலனுக்கு எஞ்சியிருந்தஉணவு,தனக்கும் அங்கிருந்தசிலருக்கும் போதாதெனக்கண்டு பாண் வாங்கிவரும் பொருட்டு வெளியே இறங்கினான்.

கோடையில் மாஸ்கோவில் மெற்ரோபுகையிரதநிலையங்களை அடுத்துள்ள பொதுஇடங்களில் மாலை 10.30மணிவரைகூட சிலஅங்காடி வியாபாரிகள் பாண்,பழங்கள்,மதுபானங்கள்,சிகரட் முதலியன விற்பது வழக்கம்.அத்தோடு குடிகாரக்கும்பலும்,திருட்டுஆசாமிகளும் கூட அலைவதும் உண்டு.

ட்ராம் வண்டிமூலம் ஒரு நிற்பாட்டிடம் வரை பயணம்செய்து,மெட்ரோ ஸ்ரேசன் அருகே, பாண் 5 துண்டுகள் வாங்கிக்கொண்டு,மீண்டும் திரும்பிச்செல்கையில் யாரோ 5 இளைஞர்கள் தன்னைவழிமறிப்பதை உணர்ந்து,அவர்களோடு வாதிடவும் முற்பட்டுவிட்டான்,மரியசீலன்!

அவர்கள் பணம்-அதாவது அமெரிக்கடாலர்-தரும்படி வற்புறுத்தினர்.வெளிநாட்டவர் எவரையும் டாலர் கொட்டும் பணமரம் என எண்ணுவது சோவியத்மக்களின் தனித்துவமான மடைத்தனம்! சீலன் பணம்கொடுக்க மறுத்ததுமன்றி,தனக்கு தெரிந்த ரஷ்யனில் வாதிடவும் முற்பட்டான்.

இரண்டு இளைஞர்கள் சீலனின் கைகளை கெட்டியாக மடக்கிப் பிடித்திருக்க வேறொருவன் எதிர்பாராமல் இடுப்பில்செருகி இருந்த கத்தியை எடுத்து,சீலனின் அடிவயிற்றில் குத்திவிட்டான்.சீலனின் ஓலத்தைக்கேட்டு,அங்கொருவர்,இங்கொருவர் மையிருட்டில் அசைவதைக்கண்ட திருடர்கூட்டம் ஓடிமறைந்துவிட்டது.கத்திக்குத்தையும் வாங்கிக்கொண்டு சாமர்த்தியமாக மெல்லமெல்ல நடந்துவந்து,குடியிருந்தவீட்டுக்கதவண்டை வந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தியாகலிங்கம்:போலவோக்:இரா.விஜய்:போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் கின்சார்விக்:பா.பாலேந்திரன்;பிறத்வோக்:எஸ்.தங்கராஜா
பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன்:ந.பாலமுரளி181.4729336:திருமதி.த.மனோகரன்181.4713060:மு.ஆறுமுகம் 181.5432126
கிருஷ்ணா வைகுந்தவாசன் 181.542 9787 செ.நாகேந்திரன் 181.5532190கனடா:பா.சிவலிங்கம்416.4497607:இ.வளர்மதி:
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/ அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161:பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்

அழைப்புமணியை அமர்த்திவிட்டு தரைசாய்ந்து போனான்,சீலன்! உள்ளேயிருந்த சகபாடிகள் வந்து பார்த்தபோது சீலன் முக்கிமுனகி அனுங்கிக்கொண்டு,வேதனையுடன் கிடப்பதைக்கண்டு,பக்கத்துவீட்டு ரஷ்யநண்பரின் உதவிகோரி,அவர் மூலம் அம்புலன்சுக்கு தகவல் கொடுத்தனர்.அம்புலன்சு வண்டி சீலனை ஆஸ்பத்திரியில் சேர்த்தது. வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த மரியசீலனைப்பார்த்த பொலிசாரும் இரக்கப்பட்டனர். ஆயினும் குற்றவாளிகளைக்கண்டுபிடித்துக் கைதுசெய்யக்கூடிய நடவடிக்கைகள் எதுவும் அவர்கட்கு கிடைக்கவில்லை.

எனினும் நான்கு மாதங்கட்குப் பின்னர் 1994 ஐப்பசி மாதம் அளவில் குற்றவாளிகள் சிலரைக் கைதுசெய்ததாகவும்,மரியசீலனின் புதியமுகவரியையும் வினவி பொலிசார் என்னுடன் தொடர்புகொண்டனர்.

மதனும்,மரியசீலனும் இந்தக்கசப்பான அனுபவத்திற்குப்பின் ஜாகை மாறினார்களா?அல்லது நாட்டைவிட்டே நகர்ந்துவிட்டார்களா? என்பது எனக்கு இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

மாஸ்கோவில் இவைமட்டும் தான் நான் பெற்ற அனுபவங்கள் என்றில்லை.பல கசப்பான அனுபவங்களும் உண்டு.அவற்றை எல்லாம் இங்கு விபரித்தால் நடுநிலையில் நின்று வாசித்து விடயங்களை ஊகிக்காதசிலர்,அரசியல் சார்பானதாக அவற்றை மாற்றிவிடவும்கூடும். உண்மையான ,நேர்மையான அரச ஊழியர் கட்சிச்சார்போ,இன,மத, மொழி சார்போ இன்றி,தன்கடமைகளை சகலருக்கும் சரியாகச்செய்துவருவர்.இருந்தாலும் எல்லோரையும் எல்லாக்காலத்திலும் ஒரு விசுவாசமான ஊழியரால் திருப்திப்படுத்த முடியாது.

எப்போதும் நிறக்கண்ணாடிகள் ஊடாகவே மற்றவர்களைப் பார்க்கும் மனிதர்கள்,அதுதான் நிசம் என்று எண்ணினால், அப்படியானவர்களை யார்?எப்படி? மாற்றிவிட முடியும்.அந்தக்கருத்தைமாற்றவே முடியாது.அதுவே இயற்கைநியதி!

(முற்றும்)

(மறுஇதழில் மட்டக்களப்பு பற்றிய இவரது தொடர் ஆரம்பமாகும்.)

## வாசகர் கடிதம்:

**அன்புள்ள ஆசிரியருக்கு!**

ஈழப்போராலும்,வறுமைக்கோட்டாலும் சிதறுண்டுபோன தமிழ்பேசும்சமூகம் நடுக்கடலிலும்,பனிமலையிலும் பரிதவிக்கிறார்கள்.துன்பநிலையிலும் சற்று குளிர்ச்சியாய் இருக்கட்டும் என்பதற்காய் சர்வதேசதமிழர் புரியும் சேவை பாராட்டுக்குரியது.

அந்நியநாடுகளில் சிதறுண்ட சமூகங்கள் அவலநிலைகளையும்,அறிவுள்ளஆக்கங்களையும் இனிதே வடித்து விடுகின்றீர்! ஈழத்துப்போரால் ஒன்றிணைந்த சமூகங்கள் உடைபட்டிருப்பதையும் ஆழமாகவே அறிந்துவைத்திருக்கின்றீர்.பிளவுண்டசமூகங்கள் மீண்டும் இணைவதற்காய் பாடுபடுக!சிதறுண்ட சமூகங்கள் சிந்தனையுடன் வாழ சிறப்பான அறிவுரைகள் தருக! இதழின் அழகியஆக்கங்கள் ஒவ்வொன்றும் சர்வதேசதமிழர் இதயத்தை தொடவேண்டும்.

வாழ்க தங்கள் இணைப்புப்பணி!
வளரட்டும் இந்த அறிவியற்பணி!!
உயரட்டும் இங்கு,ஒற்றுமைப்பணி!
முடியட்டும் எம்வேற்றுமைஅணி!!

**காங்கேயனோடை**
**ஏ.யூ.எல்.ஏ.ஹில்மி–தென்கொரியா**

---

**அன்பின் ஆசிரியருக்கு,**

காதலி வரவுக்காய் காத்திருப்பது போல் சர்வதேசதமிழர் வரவுக்காய் வழிமேல் விழிவைத்து காத்திருப்பதில் ஒருஏக்கம்!உலகஅளவிலான தமிழர் கருத்துப்பரிமாற்றுநோக்கம் நன்கு வெற்றியடைந்துவருகிறது. மனிதநேயர்கட்கு கண்ணீர் தரும் ஈழத்துசகோதரியின்மடல் துன்பம்!

**மதுரை இரா.இரவி**

---

**அன்புடையீர்,**

வணக்கம்!சர்வதேசதமிழர் வாயிலாக தமிழர்களின்ஒருங்கிணைப்பிற்காக பாடுபட்டுவரும் தங்கள் இதழ் வாழ்த்துதற்குரியதே!தொடர்புகொள்ள பலவிலாசங்களையும்,பல்வேறு அமைப்புக்களையும் இதழ்களில் தருவது ஓர்உயர்வான பார்வையே. பல்வேறுபகுதிகளிலுள்ள தமிழ்பேசும் மக்களோடு தொடர்புகொண்டு அவர்களை இதழின் அப்பகுதிப் பொறுப்பாளராக நியமித்து இதழை விரிவுபடுத்தி,இதழ் வளரப் பாடுபடுவது ஒரு தேவையான நிகழ்வே! நார்வேயிலிருந்து கொண்டு பலரையும் இதழில் இணைத்து இதழை நடாத்த பல்வேறு யுக்திகளையும் கைக்கொண்டு இயங்கிவருவது கண்டு மகிழ்ந்தேன்! தங்களின் முழு இதழ்களையும் தொகுத்தபின் (18ல் 14இதழ்கள் உள)இவைபற்றி ஆய்வுக்கட்டுரை எழுதவுள்ளேன். அது சர்வதேசதமிழரின் நோக்கு, போக்கு,சாதனை,எதிர்கால திட்டம் பற்றி விரிவானஅலசலாகஅமையும். மீதிஇதழ்களை அனுப்பிஉதவுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**பொள்ளாச்சி நசன்–ஆசிரியர்,**
**சிற்றிதழ் செய்திஆய்வு மையம்,**
**1,Sampathnagar,Suleswaranpatti,**
**Pollachi-6,Tamilnadu.642006,India**
(மீதிஇதழ்கள் அனுப்பப்படும்–ஆர்)

---

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,**

வெயில் இருந்தால்தான் நிழலுக்கு மதிப்பு!என்பதற்கிணங்க பிறநாடுகளில் வேறுமொழிகளிடையே வாழுகையில் தான் நம்மொழியின் அருமை நமக்குப்புரிகிறது.நம்மொழி மறைந்துவிடுமோ?எனும் பயம் நமக்குள் ஒரு வேகம் தரவேண்டும்! தமிழ் அணைந்துபோகாமல் இருக்க புத்துணர்ச்சியுடன் புதுப்புது எழுத்தாளர்கள் ஆக்கங்களை துணிவுடன் வடிக்கவேண்டும். புதுப்புதுகருத்துகளுடன் ஆக்கங்கள் வருவதைக்காண சந்தோசம், ஆர்வம் அதிகரிக்கிறது. சாதுரியமான இவ்விதழ் மேலும் வளர்ச்சியும்,பொலிவும் பெற ஆசையும்,வாழ்த்துக்களும்!மாஸ்கோவில் இருந்து கனடாவுக்கு குடிபெயர்ந்ததால் கனடா தமிழர் பற்றிய ஆக்கங்கள் அனுப்பிஉதவுவேன்!

**வன்னியூர் வளர்மதி – கனடா**

---

**அன்பு நண்பரே!**

வணக்கம்!வாழ்த்துக்கள்!சர்வதேச தமிழர் எனும் இவ்விதழ் நாளும் கிழமையும் நளினமாய் வளர்தல் கண்டு மிக்கமகிழ்ச்சியடைகிறேன். தமிழர் மனம்போல் நிலத்தினும் பெரிதாய், வானினும் உயர்வாய் இவ்விதழ் வளம் தரட்டும்! சிறந்ததமிழர்கள்–விஞ்ஞானிகள், வல்லுனர்கள் பற்றி பேட்டிகாணவும் உலகுக்கு அறிமுகம்செய்யவும் ஆர்வமுண்டு.அதேபோல தமிழகப்பெருமைக்குரிய பெண்மணிகளை நேரில்பேட்டிகண்டெழுத என் துணைவிக்கும் ஆர்வமுண்டு!

பேராசிரியர் வ.மாசிலாமணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐ.ஐ.ரி. 2351365/3094 :திருச்சி:பேராசிரியர்கே.செல்லப்பா –பாரதிதாசன் பல்கலைக்கழகம்:பேராசிரியர் இரா.இரகுபதி/பிசப் ஈபா கல்லூரி மதுரை:இரா.இரவி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:இரா.ஜெயசேதுபதி:: கதிர்.சம்பத்குமார் கேரளா: பேராசிரியர் கே ஏ.ராஜாராம்; ச.வெள்ளிங்கிரி: டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்.கைதராபாத்:

**அமெரிக்கஜனாதிபதி ஊடாக,**
**அமெரிக்காவின் ஐ.நா.தூதர்**
**திருமதி.மடலின் ஆல்பிறைற்**
**அவர்கட்கு,**
**வெள்ளைமாளிகை,**
**வாசிங்டன் டி.சி., யு.எஸ்.ஏ.**
**ரெலிபக்ஸ்:1202 4562461**

அன்பார்ந்த ஐயா/அம்மணி,
அமெரிக்கா, ஐ.நா.பாதுகாப்புச்சபை, சர்வதேச சமூகம் ஆகியவற்றின் கவனத்துக்காக இலங்கையின் யாழ்ப்பாணத்தில் 5 லட்சம் தமிழ் அகதிகளின் துன்பத்தை இந்த வேண்டுகோளின் மூலம் எடுத்துச் சொல்லவிரும்புகிறோம்.

அதேசமயம் இலங்கைஅரசு எவ்வாறு தமிழர்வாழ்வையும்,வீடுகள், பாடசாலைகள்,வைத்தியசாலைகள், தேவாலயங்கள்,கோவில்களையும் தனது கொடுமையான,உலுத்தத்தனமான இராணுவமுறைகளால் நிர்மூலமாக்குகிறது என்பதையும் கூறவிரும்புகிறோம்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை இதுபற்றி விவாதித்து,கொடுமையான இலங்கைஅரசின்நடவடிக்கைகட்கு எதிராக,ஒரு முற்றுப்புள்ளி வைத்து தமிழர்களை இனக்கொலையிலிருந்து காப்பாற்றவேண்டும். உலகநாட்டு உதவிஅமைப்புகளின் உதவியையும்,சர்வதேச பத்திரிகையாளர்களையும் யாழ்ப்பாணம் செல்ல அரசு அனுமதிக்காததையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இந்த கஷ்டமான சமயத்தில் தாங்கள் சிறுபான்மையினமான தமிழருக்கு குரல்கொடுத்தால் மிகுந்த மதிப்பளிப்போம்.தயவுசெய்து உதவுங்கள் 5லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் இராணுவத்தின் பாகுபாடற்ற செல்–அடிகளால் தம்வீடுவாசல்களை விட்டு தப்பிவந்து,திறந்தவெளிகளில் பசி,பட்டினி,நோய்,துன்பத்தில் வாடுகிறார்கள்.பாரமான செல் அடிகளும்,விமானத்தால் பாடசாலை தேவாலயம்,கோவில்கட்கு,குண்டு வீசலும் நடந்ததால் பலர் இறந்துள்ளனர்.தப்பி ஓடும் அகதிகட்கும் குண்டுவீசுகின்றனர்.

சர்வதேச அகதி உதவிகளை தமிழர்கட்கு வழங்காமல் சிங்கள கிராம மக்கட்கு வழங்குகிறார்கள். சர்வதேச ஆயுத உதவிகளை உலகமெங்கும் எழுதிப்பெற்ற இலங்கைஅதிபர்,சர்வதேசஅமைப்புகளின் அகதிகளுக்கான உணவு, மருந்து உதவிகளை தடுப்பது எவ்வகையில் நியாயம்? இதனால் ஆயிரக்கணக்கானவர் இறக்கலாம். சர்வதேசபத்திரிகை,தொலைக்காட்சி நிருபர்கள்,புகைப்படக்காரர்களை தமிழர் அகதியாக உள்ள இடங்கட்கு அனுமதியாது,இராணுவபக்கம் மட்டும் செல்லவிட்டதுடன்,ஒரு பக்கச்சார்பான இராணுவச் செய்தி அறிக்கைகளையே விட்டுக்கொண்டிருந்தது எவ்வகையில் நியாயம்? உடனடியாக ஐ.நா.சபை எமது பிரச்சனை, துன்பத்தில் தலையிட்டு இலங்கை அரசு விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தமிழர்களை பாதுகாக்க வழிசெய்யவேண்டும். இலங்கைஅரசே தமிழருக்கெதிராக குற்றம் செய்வதால்,இலங்கைஅரசின் அனுமதிக்காக சர்வதேசசமூகம் காத்திருக்கத்தேவையில்லை.

ஆயுதத்தடை,பொருளாதாரத்தடை, சர்வதேசஉதவி நிறுத்தம்,மற்றும் பொருத்தமான உடனடி நடவடிக்கைகள்,இலங்கைஅரசு மானிடத்துக்கு எதிராகச்செய்யும் குற்றத்துக்கு மிகமிக அவசியமானதாகும். உலகில்வாழும் சுமார் 80மிலியன் தமிழர்கட்கென தனியானநாடோ,தனியான கொடியோ,அல்லது ஐ.நா.அங்கத்துவமோ இல்லாதபடியால், தாங்கள், இலங்கையில் தமிழர்களின்–தம்தலைவிதியை தாமே நிர்ணயம் செய்யும்–சுயநிர்ணயஉரிமையை,அங்கீகரித்து குரல் தாருங்கள். தமிழ்பேசும்மக்கள் பிரிந்து போக விரும்புகிறார்களா? அல்லது சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார்களா? என்று ஒரு சர்வசனவாக்கெடுப்பை வட–கிழக்கு மாகாணத்தில், நாகரிகமடைந்த கனடாவின் கியுபெக்மாநிலம் நடாத்தியதுபோல் நடாத்தி நியாயமான அரசியல் நடாத்தும்படி இலங்கை அரசை வற்புறுத்துங்கள்!

அனேகமான தமிழர்கள் கொடுமையான சிங்களஅரசிடம் இருந்து, இந்த அமைதியான வழியில் விடுதலை பெறவே விரும்புகிறார்கள்.தாங்கள் எமதுபிரச்சனையை பாதுகாப்புச்சபைக்கு எடுத்துச்செல்வது குறித்து,உடன் பதில்தந்து உதவுமாறு கடவுளின் பெயராலும், நீதியின் பெயராலும்வேண்டுகிறோம்.

**தங்கள் உதவிகோரும்,**
**ஈழத் தமிழ் அகதிகள்**
(உலக தமிழர் அமைப்புகளும் எழுதுக!

சர்வதேச தமிழர் தகவல்சேவை

**ஈழத்தமிழர் அவலம் குறித்து உலகத்தமிழரின் ஜனநாயகரீதியான அரசியல்கட்சிகள்,சங்கங்கள், அமைப்புகள் முறைமீடுகளை அனுப்பக்கூடிய முகவரிகள்:**

1. H.E.The President of the U.S.A
The White House,
Washington D.C.,U.S.A.
fax.1.202.4562461
2. Hon.British Prime Minister,
10, Downing St, London.
U.K.
3. Hon.Candian Prime Minister
Langevin Blk,80,Wellington st,
Ottawa,ON K1A0A3,Canada.
Tel.613.992.4211,fx.941.6900
4. H.E.The President of France
Palais de l'Elysée
5,rue du Faubourg Siant-Honré,75008 Paris,France
5. H.E.The German Chancellor,
Chancellors Office,
Bonn,Germany.
6. H.E.Secretary-General,
United Nations HQ,New York,
N.Y.10017,U.S.A.
Tel.1.212.9631234
Fax.1.212.9634879
7. U.N.Humanrights Commission,
Palais des Nations,CH.1211,
Genewa 10,Switzerland
Tel.41.22.917.1234
Fax.41.22.917.0005
8. U.N. H.C.R.Office,Cse postale 2500,CH.1211,Geneva 2,Dépot
Switzerland.Tel.41.22.739.8111
Fax.41.22.731.9546

***தமிழர் புனர் வாழ்வுக் கழகம்.***
Pb.4742, Sofienberg
0506 Oslo.
**Bankgiro: 7050 66 28081**
**Postgiro: 0813 33 34786**

Tel:
நோர்வே : 47 / 22 646592
பிரான்ஸ் 33 / 43 58 11 42 - 42 63 24 87
பிரித்தானியா 44 / 81 5211313 - 1714353682
ஜேர்மனி 49 / 5955 1436 - 21 68 58 608
சுவீடன் 46 / 8 7612943 - 8 6870649
சுவிஸ் 41 / 41 2608398
டென்மார்க் 45 / 97223647
கனடா 1 416 461 5991
இத்தாலி 39 / 91 6113179
நெதர்லாந்து 31 / 72644442
அவுஸ்திரேலியா : 61 / 3 800 3591

*நிதி உதவி வழங்குக.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்.ஆர்.இலட்சுமணன்: ரஷ்யா/மாஸ்கோ: க.சபாரத்தினம்; யோன்சன் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்:
பி.யோகநாதன் :ஜித்தா:எஸ்.காளிதாஸ்,துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; பி.ஜெகதீசன்; ஜேர்மனி:க.செந்தில்:0230478452:த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

## சர்வதேச தமிழர் 1995
## கார்த் –மார்கழி,தொ.2,இல.9

---

### ஆசிரியர் கருத்து:

---

### தமிழர்களும் சிங்களவர்களும்!

இந்த நூற்றாண்டில் தமிழர்கள் 5 லட்சம் பேர் தம் பாரம்பரிய தாயகமான யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவேண்டிய துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளமை யுத்தத்தின் அகோர முகத்தை காட்டுகிறது.குழந்தைகள்,முதியோர்,பெண்கள்,சிறார்கள், பசி,துன்பம்,உடல் உளநோய்கட்கு ஆளாகியுள்ளதை மடிவதை உலகத்தமிழர் மிகமிகக் கவலையுடன் நோக்குகிறார்கள். தமிழர்க்கு நீதியும்,அமைதியும் தருவார் எனஎதிர்பார்த்து தேர்தலில் சிறுபான்மையர்அமோகஆதரவும் பெற்றுவந்து,மலையக முன்னணி தலைவர் சந்திரசேகரனின் ஒரு வாக்கால் பாராளுமன்றில் பெரும்பான்மையும் பெற்று,பின் சகலமக்கள் வாக்காலும்,தொண்டமான் ஆதரவுடனும் இலங்கைஅதிபரான சந்திரிகா குமாரதுங்க,தனது தந்தை, தாய்,மற்றும் சிங்களத்தலைவர்கள் காட்டிய அதே பாதையில் வெகு விரைவில் காலடிவைத்து, தான் சிங்களவர்கட்கு மட்டுமே உரியவர் என்பதை சர்வதேசசமூகத்துக்கும், தமிழர்க்கும் காட்டிவிட்டார்.
அத்துடன் சர்வதேசபத்திரிகையாளர்கள்,சர்வதேசஉதவிகளை வடக்குக்கு அனுமதிமறுத்ததும்,ஆனால் ஆயுதஉதவி கோரி உலகநாடுகள் பலவற்றுக்கு கடிதம் எழுதியதும் கூட இவரது இரட்டைத்தன்மையை உலகுக்கு காட்டிவிட்டது.
அரசியல்ரீதியாக பூரணசமஷ்டிக்கு தயார்! என்ற தமிழர் கோரிக்கை, அமைதிக்கு வழி! என்பதையும், அதனை,முன்னெடுத்து செல்லவும் இன்னமும் அதிபருக்கு காலம் கடந்துவிடவில்லை.
தமிழர்களை அன்பாலும்,அறிவாலும் மட்டுமே வெல்லமுடியும்,யுத்தத்தால் அல்ல!என்ற கொள்கையை எப்போது சிங்களத்தலைவர்கள் உணர்கிறார்களோ?அன்றே அவர்கள் தம்மக்கட்கு பயமற்ற,நிம்மதியான வாழ்வுக்கு உத்தரவாதம் தருகிறார்கள்.இதனை அறிவாலன்றி அனுபவத்தால் உணர இஸ்ரேலியர்கட்கு 28 வருடம் பிடித்தது.

## சிந்தனைத்தடாகம்.Think Tank

---

**யாழ். நகரில் சிங்க(ள)க்கொடியை சந்திரிகாவின் மாமனார் அனுருத்த ரத்வத்தை ஏற்றியபின்–ரைம்–நிருபர் அனிதா பிரதாப்புக்கு தனது பலத்த பாதுகாப்புள்ள ஜனாதிபதி மாளிகையிலிருந்து,இலங்கைஅதிபர் சந்திரிகா அளித்தபேட்டியிலிருந்து சிலபகுதிகள்:**

கேள்வி:யாழ்ப்பாணத்தை கைப்பற்ற வேண்டிய அவசியம் என்ன?
பதில்:அது விடுதலைப்புலிகளின் தலைமையகம் மட்டுமன்றி தமிழர்களின் இதயபூமியும் ஆகும்.
கே:யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியது, தமிழர்மனநிலையை காயப்படுத்திவிட்டது குறித்து—?
ப:அந்த உணர்வு எப்படி வந்தது என்று எனக்கு விளங்கவில்லை. புவியியல்ரீதியாயும்,அரசியல்ரீதியாயும் யாழ்ப்பாணம் இலங்கையின் ஒரு பகுதியாகவே இருந்திருக்கிறது. இராணுவம் யாழ்ப்பாணத்தில் முற்றுகையாய் இருக்கப்போவதில்லை. தமிழர்களே யாழ்ப்பாணம்,வடக்கை சிவில்நிர்வாகத்தில் அதிகாரபரவல் மூலம் நிர்வகிப்பர்.
கே:உங்கள் வெற்றிவிழா வைபவம் பழையசிங்கள வெற்றிவிழா சமய வைபவம் போல் காணப்பட்டதே..?
ப:அப்படி அல்ல.அது ஒரு தற்செயலான சம்பவமே. யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சி எம்நாட்டு வரலாற்றில் ஒரு முக்கியநிகழ்வே. நாம் இதனை பெரிதாககொண்டாடவில்லை.இது எந்தவகையிலும் தமிழர் மீதான எமது வெற்றியையோ.அல்லது அவர்களை அடக்கியதாகவோ பொருள்படாது. பாதுகாப்புஅமைப்பு தமதுகடமையை நிறைவேற்றியதாக,அரசதலைவர்,பிரதானகட்டளையிடுபவர், என்ற ரீதியில் எனக்கு அறிவித்தது.
கே:விடுதலைப்புலிகளின் கொலைப்பட்டியலில் முதலாவதாகவுள்ள நீங்கள் பலத்தபாதுகாப்பில் வாழ்கிறீர்கள்.முந்திய தங்கள்வாழ்விலிருந்து இது எப்படி மாறுபட்டது?
ப:சாதாரணமாக உலாவவும்,விரும்பிய இடம் போகவும் முடியாமலுள்ளது.சுதந்திரமானவாழ்வை இழந்துள்ளேன்.எங்கு திரும்பினாலும் 1000 கணக்கில் பாதுகாப்புப்படை!
கே:உலகில் மிகஆபத்துக்குள்ளான பெண் எனும் உணர்வு எப்படி?
ப: பகிடிக்குரிய விடயம் அல்ல!

பழைய கால வெற்றிவிழா போல் யாழ்ப்பாணவீழ்ச்சியை அரசாங்கம் கொண்டாடியமை,முழு தமிழ்ச்சமூக உணர்வையும் காயப்படுத்தியது.
**யோசப் பரராசசிங்கம்,தமிழ் எம்.பி.**

---

14ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்இராட்சியம் நல்லூரை தலைநகராகக்கொண்டு யாழ்ப்பாணகுடாநாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. விரைவில் யாழ்ப்பாண பட்டின இராட்சியம்,தெற்குநோக்கி சிங்களவர்களுடனான வரலாற்று முரண்பாட்டுடன் விஸ்தரிக்கப்பட்டது. அதிகமக்களற்ற ராஜரட்டை பகுதி இருசாராருக்குமிடையே ஒரு நடுநிலைபிராந்தியமாக விளங்கியது. இபின் பட்டுடா எனும் முஸ்லிம் பிரயாணி யாழ்ப்பாணஇராட்சியம், அதன் வர்த்தகம் பற்றிய நல்ல விவரணையை எழுதியுள்ளார். இலங்கைமுழுவதும் தமிழர்குடியிருப்புகள் முன்புபரந்துகாணப்பட்டனபின்பு தென்மேற்கில் சிங்கள அரசுகளும்,வடக்கில் தமிழ்அரசும் இனமொழிரீதியாக இந்ததீவை இரண்டாகப்பிரித்தன.வடகிழக்கில் தமிழர் பெரும்பான்மையராகினர். தமிழ் இலக்கிய கலாசார வளர்ச்சி தமிழ்அரசர்களால் வளர்ந்தது. 1560,1591ல் போர்த்துக்கீசரின் யாழ்ப்பாணமுற்றுகை வெற்றிதரவில்லை 1619ல் யாழ்.அரசு போர்த்துக்கீசர் ஆளுகைக்குள் வந்தது. டச்சுக்காரர் 1658பெப்ரவரியில் மன்னாரையும்,யூனில் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினர்.இலங்கையை கொழும்பு,காலி,யாழ்ப்பாணம் என 3 பிரிவாக பிரித்து நிர்வகித்தனர்: 1796ல் இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்வந்தது,மட்ராசில் இருந்து இலங்கையை அவர்கள் நிர்வகித்தனர்.பிரஞ்சுக்காரருடனான யுத்தத்தால் இலங்கையின் முக்கியத்துவம் விளங்கப்பட்டு 1802ல்,பிரிட்டிஷ்முடிக்குரிய காலனியாக மாற்றப்பட்டது. 1919ல் தமிழர்,சிங்களவர் சேர்ந்து இலங்கை தேசியகாங்கிரஸ் அமைத்து பின் சிறுபான்மையர்உரிமை மறுக்கப்பட்டதால் பிரிவுற்றனர்.1955ல் சிங்களதேசியவாதத்தை பண்டாரநாயகா முன்வைத்து,தேர்தலில் வென்று சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவந்ததால் தமிழர் ஒதுக்கப்பட்டு சமஷ்டிகட்சி உருவானது
**–பிரித்தானிய கலைக்களஞ்சியம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டென்மார்க்:ச.யோகேந்திரம்:வ.க.பரமநாதன்: பிரான்ஸ்: செ.ஜெயகுமார்:த.தர்மசீலன் 1.43759171: இ.கிருபானந்தன்
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன் 41.684549 விதுரன்: க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி.மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.:கௌரி ராஜசுந்தரம் யாழ்ப்பாணம்:திருமதி.பி.ஷம்சானந்தி: செ.நடராசா

## தென் ஆபிரிக்க கடிதம் !

---

அன்புத்தமிழ்ச்சகோதரிக்கு!

---

உலகின் பலபகுதிகளிலும் வாழும் தமிழர்கள் தம்அறிவு,அனுபவத்தை சகதமிழர்களுடன் பகிரவேண்டும், அதனால் அவர்கள் முன்னேற்றம், ஐக்கியம் பெறவேண்டும் என்ற–சர்வதேசதமிழர்–சஞ்சிகையின் உயர்நோக்குக்கு அமைய எனது இந்த தென்ஆபிரிக்க கடிதத்தை வரைகிறேன்.இதுபோல் உலகின் பலமூலையிலும் வாழும் தமிழ்ச் சகோதரியரின் கடிதமும் –சர்வதேச தமிழர்–மூலம் கிடைக்கப்பெறின் அளவிலாஆனந்தம் அடைவேன்.

நான் 1983 சித்திரைமாதம்,முதன்முதலில் தென்ஆபிரிக்கமண்ணின் ஜோகனஸ்பேர்க்கில் காலடிஎடுத்து வைத்தேன்.குளிர்காலம் அப்போது ஆரம்பித்தபடியால் அளவானகுளிருள்ள பொருத்தமான சுவாத்தியமாக காணப்பட்டது.

முதலில் அங்குள்ள கறுப்புஇனமக்களை கண்டதும்,அவர்கள் பேசுகையில் எழுந்தஒலிகள்,வார்த்தைகள் பரபரப்பானதாயும்,புதுமையாயும் இருந்ததால் கூர்ந்து கவனிக்க வேண்டியதாக இருந்தது.சிலநாட்கள் அங்கு தங்கிவிட்டு,சுமார் 3 வருடங்கள் பொற்ஸ்வானாவில் எமதுதொழில்நிமித்தம்,வாழ்ந்தோம். பின்பு எனது கணவரின் வேலை மாற்றம் காரணமாக தென்ஆபிரிக்கநாடான,போபுத்ஸ்வானாவின் மொபாத்தோ நகர் வந்தோம்.அங்கு தந்திப்பரிசோதகராக என்கணவர் பொறுப்பேற்றார்.இருவருடங்கள் சென்றபின் என்கணவரின் மறைவால் மனம்வருந்தியபோதும்,எமது விடாமுயற்சியால் பிள்ளைகள் தம் உயர்கல்வியைத் தென்ஆபிரிக்காவிலே தொடர்ந்தும் படித்து,மகன் அமெரிக்காவின் கலிபோர்ணியாவில் பல்கலைக்கழக கல்வி முடித்து, தற்போது மின்பொறியியலாளராகப் பணிபுரிகிறார்.மகள் இங்கு கொம்ப்யூட்டர் துறையில் பயின்று,பயிற்று அதிகாரியாக 4 வருடம் தொழில் புரிந்துவிட்டு தற்போது பொற்ஸ்வானாவில் பணிபுரிகிறார்.

சோதனைகள்,வேதனைகள் வந்தாலும் தமிழ்ச்சகோதரியர் தம்வாழ்வில் எதிர்நீச்சல் போடக்கற்றுக்கொள்ளவேண்டும்.எனது கணவரின் மறைவுக்கு பிந்திய தென்ஆபிரிக்க வாழ்க்கை,தென்ஆபிரிக்கசமுதாயத்தில் பல்வேறுபிரச்சனைகளில் எதிர்நீச்சல் போடக்கற்றுத்தந்தது.

தென்ஆபிரிக்க கறுப்பினமக்களில் பெரும்பான்மையர் நெஞ்சில் எதுவித வஞ்சகம்,சூதும் அற்றவர்கள். அவர்கள் வேற்றுஇனமக்களுடன் மிகஅன்பாகவும்,பண்பாகவும் பழகுவர்.எங்கள் உடை,நடை,பாவனை மற்றும் கலை,கலாசார விடயங்களை அவர்கள் மிகவியப்புடனும், ஆச்சரியத்துடனும் நோக்குவர்.நாங்கள் இங்கு வேலைசெய்வது,பெரிய பதவி வகிப்பதை மக்கள் ஆதரிக்கிறார்கள்.

கறுப்பினபெரும்பான்மை மக்களாகிய தாம் திரு.நெல்சன் மண்டலா தலைமையில் வெள்ளை சிறுபான்மைஅடக்குமுறைஅரசுக்கு எதிராகப் போராடி சுதந்திரம் பெற்றதுபற்றி அவர்கட்கு மட்டிலா மகிழ்ச்சி! தேர்தலின்போது அவர்கள்,ஒருமைப்பாட்டுடன் நடந்து,தம்தலைவரை உலகம் அறியச்செய்தனர்.

சிலசில இடங்களில் பிரச்சனைகள் நடந்தாலும்,அதைப்பெரிதாக்காது, சமாளித்து வருகிறார்கள்.

டர்பன் போன்ற இந்தியர் வாழும் இடம்,குட்டி இந்தியாவாகவே காட்சியளிக்கும்.தமிழை, எம்மைப்போல் பேசமுடியாவிட்டாலும்,கலாசாரத்தை பின்பற்றுகிறார்கள்.இந்தியாவிலிருந்து,கலைஞர்களை வரவழைத்து, கலைநிகழ்ச்சிகள் நடத்துவர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், காலை 10–12மணிவரை தொலைக்காட்சியில் தமிழ்நாடகம்,பேட்டிகள் என நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவார்கள். இதற்கு கறுப்பர்,வெள்ளையர் இருசாராருமே பலத்தவரவேற்பு,தருவர். கறுப்பர் வாழ்வு, பெரும்பாலும் வெள்ளைஇனமக்களை ஒத்ததாக வேஇருக்கும். தம்நாட்டில் வாழும் பிறஇனத்தவர் கலாசாரத்தையும்,அவர்கள் கூர்ந்து அவதானிப்பர். இசையே அவர்களின் முக்கியபொழுதுபோக்கு!

கறுப்பினமக்கள் அழகாகவும்,நல்ல உடலமைப்புடனும் இருப்பர்.சில பெண்கள் மிகமென்மையானவர்களாயும்,அழகாகவும் இருப்பர்.

அவர்கள் நாட்டு நல்ல சுவாத்திய நிலையும்,உணவுப்பிரச்சினையற்ற தன்மையும்,அவர்களை ஓரளவு சந்தோசமாகவே வைத்திருக்கிறது. களவு,சூதில் அவர்கட்கு தற்போது ஈடுபாடில்லை என்றே,கூறவேண்டும் கல்வியில் தான் தற்போது அதிக அக்கறை காட்டிவருகிறார்கள்.

பல்கலைக்கழகத்தில் படிக்கவசதியிருந்தும்,பொறியியலாளர்,மருத்துவர், கணக்கியலாளர் போன்றகல்விகட்கு கறுப்பர்கள் தெரிவு குறைவே! அவர்கள் ஊக்கம் காலப்போக்கில் சரியாகிவிடும் என்று நம்புகிறார்கள்.

இவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள்!மதத்தில் மிகநம்பிக்கையுள்ளவர்கள்.தம்பழைய கலாசாரத்தையும் பழையவர்கள் பின்பற்றுகிறார்கள். தம் வீடுகளை அழகாகவைத்திருப்பதில் கைதேர்ந்தவர்கள்.

வைத்தியத்துறையில் வெள்ளையினமக்கள் பலவசதிகளை உண்டாக்கியுள்ளனர்.வெள்ளையரின் திறமையும்,ஊக்கமும் வைத்தியத் துறையை மட்டுமன்றி தென்ஆபிரிக்காவின் சகலதுறைகளையும்,விரிவுபடுத்தி முன்னேற்றியிருக்கிறது. தற்போது திரு.நெல்சன் மண்டலா ஆட்சிபொறுப்பு எனினும்,வெள்ளையர் இந்நாட்டு முன்னேற்றத்துக்கு தொடர்ந்து பாடுபடுவர்,என்பதில் ஐயமில்லை.

இலங்கையுடன் ஒப்பிடும் போது, இங்கு பயமில்லாது,மக்கள் நிம்மதியுடன் வாழ்க்கைநடாத்துகிறார்கள். இலங்கையில் எம் தமிழ்ச்சகோதர, சகோதரியர் தற்போதுபடும் அவலத்தை நோக்குகையில்,இங்கு பயமின்றி நிம்மதியுடன் வாழக்கூடியதாக இருக்கிறதென்று சந்தோசப்படவேண்டியநிலையில் உள்ளோம்,எனினும்,எமது மண்,எமது நாடு,எமது மக்கள் என்ற ஏக்கம் அடிமனதில் ஆழமாகஉறுத்திக்கொண்டேயுளது. எம்நாடு,எம்வீடு என வந்துசேரும் வரை நமக்கு நிம்மதிப்பெருமூச்சே கிடைக்காது என்றேதோன்றுகிறது! ஈழத்து சகோதர,சகோதரியர், முதியோர்,குழந்தைகட்கும், இந்தத்துன்பகரமானஅவலநேரத்தில் எதையும் தாங்கும் இதயம் தர இறைவனை வேண்டுகின்றோம்!

அன்புத்தமிழ்ச்சகோதரி மறவாது உன் நாட்டுஅனுபவங்கள்,அறிவை சகதமிழருடன் பகிர்ந்துகொள்!சர்வதேச தமிழர் வளர்ச்சிக்குமுதவுக!!

அன்புடன் சகோதரி,
திருமதி.கமலா வேலுப்பிள்ளை
பொற்ஸ்வானா,தென் ஆபிரிக்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டக்களப்பு:கோபி.ரவி:மாத்தளை: எம்.அருள்பிரகாஸ்; தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி .செ.கனகரத்தினம் கண்டி: எஸ் மயில்வேந்த ன்; அட்டன்:பாலா சங்குப்பிள்ளை:குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்: சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்:அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி

# குப்பைக்கவிஞரின் ஒரு கருத்தான பேட்டி!

**கவிச்சுடர் க.இலக்குமணசுவாமி**

நான்மாடக்கூடல் எனப்படும் மதுரையில் தமிழ்வளர்த்த தமிழ்ச்சங்கத்தில் தமிழுடன் சங்கமமாகியுள்ள புகழ்பெற்றவரும்,காவல்துறையில் உதவிக்கண்காணிப்பாளராக உள்ளவரும்,தமிழுக்கு அரும்பணியாற்றிவரும்,மொழியாற்றல் மிக்கவரும், பல விருதுகளை பெற்றவரும், மதுரைமக்களின் மனம்கவர்ந்தவரும்,பட்டிமன்றம்,கருத்தரங்கம்,கவியரங்கம் என பல அரங்குகளில் உலா வருபவருமான டாக்டர்.வாசுகணபதி அவர்களை சர்வதேசதமிழருக்காக நேர்முகம் காண்பதில் மகிழ்வு கொள்கிறேன்.

இவர் 1942ம்ஆண்டு தமிழ்நாட்டின் அருப்புக்கோட்டையில் பிறந்தவர். வரதட்சணை குறித்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்றவர்.காவல்துறையில் ஜனாதிபதி விருது–1ம்,மதுரை தமிழ்ச்சங்க செந்தமிழ்ச்செல்வர் விருதும்,மலேசிய,அமெரிக்க இலக்கியவட்ட பாராட்டுக்களையும் பெற்றவர்.

இதோ அவரது கருத்துக்கள்:

கேள்வி:புதுக்கவிதை பற்றி..........?

பதில்:கருத்துக்களை சுதந்திரமாகச் சொல்வதற்கு,சுருக்கமாக,நறுக்கென்று–எண்ணங்களை சுட்டுவதற்கு–மரபுக்கவிதையில் உள்ள ஓசை நயம்,எதுகை,மோனை இருந்தால் நன்றாக இருக்கும்.இவைகள் இல்லாததால் மனதில் நிற்பதில்லை. இலக்கணமரபின்றி இருப்பதால் கவிதை எழுத எல்லோருக்கும் பயமின்றிய ஆர்வம் ஏற்படுகிறது. அவசரமான உலகத்தில் மரபுக்கவிதையை படிக்க நேரமும், பொறுமையும் இல்லை.ஆதலால் புதுக்கவிதை காலத்தின் கட்டாயமாக ஏற்கப்படுகிறது.

கேள்வி:காவல்துறையில் பணிபுரிந்துகொண்டு இலக்கியநிகழ்ச்சிகளில் எப்படி கலந்துகொள்ளமுடிகிறது?

பதில்:காவல்துறைப்பணியில் ஈடுபடுவதால் பொதுமக்களை நேரிடையாக அதிகம் சந்திக்கமுடிகிறது. பொதுமக்கள்–காவல்துறை இலக்கியநிகழ்ச்சிகள் மூலமும் தொடர்புகள் அதிகரிக்கிறது.மற்றையதுறைகளை விட இங்கு நெருக்கமான தொடர்புகட்கு வாய்ப்புண்டு.

கேள்வி:குப்பைக்கவிஞர் எனும் பெயரை ஏன் சூட்டிக்கொண்டீர்கள்?

பதில்:மதுரையில் மிகவும் சாதாரண புலவர்கள் எழுதி எழுதிக்குவித்த ஏட்டினைக்குப்பையில் கொட்ட கிழிந்தகுப்பையை கிளறிக், கிளறிக் கவிதை எழுத நானும் கற்றுக்கொண்டேன்.குப்பையிலே தமிழ் பொறுக்கி,குன்றடியில் அதைப்படித்து,கவிதை கற்றுக்கொண்ட நான், குப்பைக்கவிஞன் என்று எனக்கு நானே,பட்டம் சூட்டிக்கொண்டேன். தமிழ்க்கவிதை மேலுள்ள காதலால் தான் இது வந்தது.

கேள்வி:பெண்ணுரிமை பற்றி தங்கள் கருத்தென்ன?

பதில்:பெண்ணுக்கு சமஉரிமை தரப்படல் மிகஅவசியம்.ஆனால் அது உரிமை என்ற பெயரில் குடும்பகட்டுக்கோப்பை குலைத்துவிடக்கூடிய சூழலில் இருந்துவிடக்கூடாது. திரியும்,எண்ணையும் போல்,கணவன்–மனைவி இருக்கவேண்டும். விளக்கில் திரி வெளியுலகுக்கு வெளிச்சம் தருகிறது.ஆனால் அந்த வெளிச்சத்திற்கு மூலகாரணமாயுள்ளது,வெளியுலகுக்கு தெரியாத எண்ணை என்பது அனைவரும் அறிந்த உண்மை!அதேபோல் கணவன் வெளிஉலகவிவகாரங்களை கவனிப்பதும்,அவனை இயக்கும்,சக்தியாக மனைவி அமைந்து உள்விவகாரங்களை பராமரிப்பதும் குடும்பஉறவை பாதிக்காது.அதற்கு மாறாக நடப்பின் குடும்பகட்டுக்கோப்பு குலைய சந்தர்ப்பமுண்டு. ஒரு குடும்பத்தினுள் சமஉரிமைக்கான பெண்ணின் போராட்டம் வரவேற்கத்தக்கது.ஆனால் அப்போராட்டம் அந்நியசக்திகளின் தலையீட்டுக்கு வழிவகுப்பது கூடாது. எதிரும்,புதிருமாக கத்தரிக்கோல் இயங்கினாலும்,இடையில் புகும் சக்தியை அது வெட்டிவிடுவது போல்,கணவன்–மனைவி சிலசமயம் எதிரும்,புதிருமாக இயங்கினும், அந்நியசக்திகளை வெட்டிவிட தயங்கக்கூடாது.பெண்கள் தம்உரிமையை இடம்,பொருள்,ஏவல் என்பதற்கு ஏற்ப குடும்ப நன்மையை பார்த்து பயன்படுத்த வேண்டும்.

கேள்வி:தற்கால சிறுகதைகள் குறித்து தங்கள் கருத்து என்ன?

பதில்:பால்உணர்வும்,வன்முறையும், தொலைக்காட்சியை ஆக்கிரமித்துள்ள இச்சூழ்நிலையில் சிறுகதைஇலக்கியம் மக்களிடையே அதிகம் வரவேற்கப்படுவதில்லை என்றாலும் அதற்குப்போட்டியாக சிலசிறுகதை எழுத்தாளர்கள் வாணிபநோக்கில் படுஆபாசமாக எழுதுகிறார்கள்.இந்தப்போக்கு நல்லதல்ல.விழிப்புணர்வு தரக்கூடிய,வாணிபநோக்கற்ற,சமுதாய முன்னேற்றம் மட்டுமே கருதும் சூழ்நிலை வரவேண்டும்.

கேள்வி:வரதட்சணை முறைக்கு தீர்வு எப்படிப்பட்டதாகஅமையும்?

பதில்:வரதட்சணைமுறை சமூகத்தில் ஒழிக்கமுடியாத பழக்கம்.வரதட்சணை கொடுக்கக்கூடாது:வாங்கக்கூடாது என்று சொல்வதைவிட, வரதட்சணை கொடுக்கக்கூடிய முறையைமாற்றம் செய்யவேண்டும் மணமகன்–மணமகள் இருவர் பெயரிலும்,கூட்டாக ஒரு குறித்த தொகையை 10–15 ஆண்டுகட்கு வங்கியில் சேமிப்புசெய்துவிடவேண்டும்.இது பெண்ணிற்கு பாதுகாப்பாக அமைந்துவிடுகிறது.பெண்ணுக்கு ஆணைப்போல் சமபங்கு தரப்படவேண்டும்.அதேபோல் ஆணைப்போல் பெண்ணுக்கும் நல்லகல்வி, வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தர பெற்றோர் முன்வரவேண்டும். பொருளாதார சுதந்திரம் பெண்ணுக்கு ஏற்பட்டுவிட்டால் வரதட்சணைக்கொடுமை என்பது வராது.

கே:தற்காலகவிஞர்களில்,பிடித்தவர்?

ப:வைரமுத்து!மிகநெருக்கமானவர்! சமுதாயசிந்தனைகளை கவிதையில் சொல்வதில் வல்லவர்!தம் எழுத்துப்போல் வாழ்வையும் தூய்மையாக வைத்திருக்கவிரும்புபவர்.சிறந்த கவிஞர்! சிறந்தமனிதர்!மறைந்த கண்ணதாசன்,பட்டுக்கோட்டையார் போன்றவர்.தொலைக்காட்சியால் தமிழக கலாசாரம்,நாடு–இனம்–மொழி கடந்த உலககலாசாரமாக மாறுகையில்,நம் சமுதாயத்துக்கு தேவையான கருத்துக்களை பாடல்வரிகள் மூலம் உலகத்தமிழ் இளைஞர்கட்கு ஊட்டிவருகிறார்.

கே:மெல்லத்தமிழினி சாகும்,என்பது சரியா?தவறா?உங்கள் கருத்து?

ப:தமிழ் சாகாது!பல்லவர்,முகமதியர் என பலர் தம்மொழியை பரப்பிய போதும் தமிழ் அழியவில்லை. இனியும் அழியாது.அது வாழும் மொழி!2000 ஆண்டுகட்கு முன்பே அழியாதது நம் தமிழ்மொழி!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொற்ஸ்வானா:திருமதி.கமலா.வேலுப்பிள்ளை புருணை: எம்.ஐ.எம்.நகீப் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தாசிங்கப்பூர்:மு.பத்மா
கு.இரஞ்சகுணாளன் மலேசியா:க.மாணிக்கவாசகர் இந்தோனேசியா: மெடான்:எம்.நாகலிங்கம்:மு.சந்திரசேகரன்:பி.கிருஷ்ணா
ஜகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு:நா.சங்கரன்:லட்சுமணன் பர்மா:அப்துல் ரசாக்

## தமிழர் கருத்தில் நல்லுலகம்

டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,
பாலக்காடு–கேரளா

தமிழர் பண்டைக்காலத்திலிருந்தே நாகரிகம் அடைந்த இனத்தவராக உலகம் போற்றும் நிலையைப்பெற்றிருந்தனர் என்பதில் ஐயமில்லை. உலகநாடுகளில் பொதுவாக இலக்கியங்களுக்குத்தான் இலக்கணம் வகுத்துள்ளனர்.ஆனால் தமிழர்களோ.அவர்களது வாழ்வியலுக்கே இலக்கணம் வகுத்திருந்தனர் என்பது உலகமக்களை கவர்ந்த விடயம் ஆகும்.

உலகம் என்பது என்ன? விஞ்ஞானிகள் கூறுவது போல.சூரியனிலிருந்து வீழ்ந்து, பன்னூறாயிரம் கோடி ஆண்டுகளாக மாற்றமடைந்து, இன்று காணப்படும் உருண்டையான மண்கோளமல்ல என உணர வேண்டும்.உலகம் என்றால் தமிழர்களுக்கு தெரிந்ததெல்லாம் வாழும் மக்கள் தாம் என்பதை அறிவோம். ஆகவே மக்களைக்கொண்டே உலகத்தை அறியமுடியும் என்பது தமிழர்சிந்தனையாக இருந்துளது. தற்காலத்தில் உலகில் எங்கும் எதிலும் பரபரப்பு,அமைதியின்மை,போட்டி,பொறாமை,பூசல் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

சுருங்கக்கூறின் உலகம் நிம்மதியின்றி தவிக்கிறது.இத்தகைய உலகம் தான் நாம் தற்போதுகாணும் உண்மையான உலகம்.நிம்மதியில்லை என்று கூறுகிறோமேயன்றி, ஏன்? எதனால்? நிம்மதி இழந்தோம் என்பது பற்றி யாருமே சிந்திப்பதில்லை,செயலாற்றுவதுமில்லை.

உலகமகாயுத்தங்கள் உருவானதற்கு மூலகாரணம் பற்றி சிந்தித்தபோது,இரண்டு மனிதர்களின் சிந்தனையில் நின்ற அமைதியின்மையே காரணம் என்று ஒருவர் கூறினார். இருமனிதர்களின் கருத்துக்களில் முளைத்தமாறுபாடானது.அவ்விருவர்களைச்சார்ந்த மனிதர்கள்–இனங்கள்–நாடுகள் என்று பரவிஉலகினையே இரண்டாகப்பிளந்துகொண்ட நிலையை வரலாறு கண்டிருக்கிறது.நிலையான நீருள்ள.குளத்தில் நாம் ஒருகல் போட்டால்.அது ஏற்படுத்தும் சலனம் பலஅலைகளாகப் பரவி குளம் முழுவதாகப்பரவுவதைக் காண்கிறோம்.

அது போலத்தான் ஒருவரின் செயல் உலகளாவிய செயலாகமாறிப்பெருகுவது என்பதைக் கருத வேண்டும்.

ஒரு அலுவலகத்தில் வேலைசெய்பவர் தம்வீட்டில் நடக்கும்பிரச்சனையால்,அதேமனநிலையில் எங்கெங்கு சென்றாலும்,அங்கங்கெல்லாம் அவரைச்சுற்றியுள்ளவர்மீது எரிச்சல்படுவதும்,கண்டிப்பதுமாக இருப்பார்.அந்நிலையில் அவரது எரிச்சலுக்கு இலக்கானவர்களும், மனநிலை இழந்தவர்களாகி,பின்பு தத்தம் இல்லங்களில் நெருங்கிய உறவினர் மீது எரிச்சல்காட்ட அவர்களும் பாதிக்கப்படுவர். தனிமனிதஉணர்வுகள் பலரையும் தாக்குகின்ற நிலையில் பெரும் பரப்பளவை பாதிக்கின்றது.ஆகவே உலகம் என்ற ஒன்று,உயிரோட்டமாக,அமைதியாக நிலைபெறுவதற்கு காரணம் அதில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வே, என்பது தெளிவாகின்றது.தனிமனிதன்தான், தான், தன் இல்லாள், தன் மக்கள்,தன்சுற்றம்,தன்இனம்,தன்நாடு என விரிந்து தன் உலகம் என்ற மாபெரும் நிகழ்வுக்கு காரணமாகின்றான்.அந்நிலையில் உலக அமைதி என்பது அதிலுள்ள ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வோடு பொருந்தியது என்பது உண்மையாகிறது.

இந்த உண்மையை மனதிற்கொண்டுதான் பழங்காலத்தமிழர் வாழ்ந்திருந்தனர் என்பது இலக்கியம், இலக்கணம் காட்டும் உண்மையாகும்.பழந்தமிழ் மக்கள் எவ்வாறெல்லாம் வாழ்ந்திருந்தனர் என்பதற்கு எழுதிவைத்த காட்டுக்கள் இல்லையென்றாலும், வாழ்வைப் பாடிவைத்த பாட்டுக்கள்.அப்பாட்டுக்களின் நெறிகளை எடுத்துக் கொண்டு இயற்றிய இலக்கணங்களும்,ஓரளவு துணைபுரிகின்றன என்பதை மறுக்கவியலாது.தமிழில்,பழந்தமிழ் இலக்கணமாகிய–தொல்காப்பியம்–எனும் இலக்கணநூல்,மக்கள் வாழ்வினை அகவாழ்வு,புறவாழ்வு என இருகூறாகப் பகுக்கிறது.

இன்றைய விரைவுஉலகம் கூட, மக்களின் புறவாழ்வுக்கான சிறப்பியல்புகளைக் கொணர்வது அவர்தம் தனிப்பட்ட அகவாழ்வுதான் என்று உணர்ந்து கூறிவருகிறது.

ஒருமனிதனுக்கு வாய்த்த தனிப்பட்ட வாழ்வு சிறந்திருப்பின்,அவன் மனதில் சிறப்பு உண்டாகும்,நிம்மதி உருவாகும்.அதனால் அவன், அவனுக்கு புறமாகவுள்ள அனைத்துக் கூறுகளிலும் நிம்மதியைக் காட்டுவான்,என்பது உலகம் ஏற்றுக்கொண்டுள்ள உண்மையாகும். உலகில் இன்று நடைபெறும் வன்முறைகளும்,கொலை,கொள்ளை போன்ற குற்றங்களும் பெருகுவதற்கு காரணம்,அவற்றில் ஈடுபடுபவர்களின் மனோநிலையில் ஏற்படுகின்ற அமைதியின்மையே என்று கூறப்படுகின்றது.மேலும் அவர்களுக்கு சொந்தவாழ்க்கையில் கிடைத்த கசப்பான அனுபவங்களே அவர்களை அந்நிலைக்கு இழுத்துச்சென்றன,என்பது ஆராய்ந்து கண்ட முடிவாகும்.ஆகவே விரிந்து பரந்த உலகத்துக்கு அச்சாணியாக இருப்பது தனிமனிதர்களின் நிறைவான வாழ்வே என்பது புலனாகின்றது. இதே உண்மையை பலநூறு ஆண்டுகட்கு முன் தமிழர் அறிந்திருந்தனர் என்பது வியப்பைத் தருகிறது.

> யாண்டு பலவாக நரையில வாகுதல்
> யாங்கா கியரென வினவு திராயின்
> மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
> யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
> அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
> ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர் யான்வாழு மூரே
> (புறநானூறு)

என்பது தமிழர் புலமையில் முகிழ்த்த ஒரு பாடலாகும்.

கோப்பெருஞ்சோழன் எனும் மன்னனும்,பிசிராந்தையார் என்ற பாண்டி நாட்டுப்புலவரும் ஒருவருக்கொருவர் நேரில் பார்க்காமலேயே,புகழ் மட்டுமே அறிந்து நட்புக்கொண்டார்கள்.அந்நிலையில் சோழன் மனமுடைந்த ஒருநிலையில்,வடதிசை நோக்கி உண்ணாவிரதம் இருந்து உயிரைப்போக்க முனைந்தான்.தன் உயிர் பிரியமுன் புலவர் நிச்சயம் வருவாரென்று அம்மன்னன் நம்பிக்கையோடிருந்தான்.

புலவரைப்பற்றிய செய்திகளைச் செவியுற்றிருந்த ஏனையவர்கள்,அப்புலவர் மிகவும் வயது முதிர்ந்தவராகவே காணப்படுவர் என எண்ணியிருந்தனர்.ஆனால் புலவர் நேரில் வந்ததும் அவரது இளமைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொது நூலக முகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

தோற்றத்தைக் கண்டு வியந்து, வினவியபோது,அது இந்தப்பாடலாக மலர்ந்தது என்பர்.
இன்றைய உலகமக்களுக்கு முதுமையென்பது விரைவில் தோன்றி விடுகிறது.முதுமைக்கு வெளிப்படையான அறிகுறி நரைமயிர்தான். இன்று இளைஞர்களும்கூட நரைமயிருக்கு மருந்துகாண ஆவல் கொண்டுள்ள நிலையைக் காண்கிறோம்.அப்படியிருக்க முதியவருக்கு நரைவராத காரணம்,அப்போது வியப்புக்குரியதாகவே இருந்தது. புலவர் தம் இளமையைக்காப்பாற்ற கிடைத்த மருந்து யாதென இப்பாடலில் விளக்குகிறார்.
ஒருவனுக்கு மனைவி மாட்சிமை பொருந்தியவளாக வாய்த்திடில் இனிய இல்லறம் முகிழ்க்கும். இருவரின் இணைந்த நல்வாழ்வுக்கு நற்சான்றிதழ்கள் போலே நன்மக்களும் பிறந்திடில் அம்மனிதன் முழுமனிதன் ஆகின்றான்.
அந்நிலையில் அவன் அகவாழ்வு அமைதியாக மலர்கிறது.அவனைச் சுற்றியுள்ள மக்களும்,அவனை ஆட்சிசெய்யும் மன்னனும்,நெறியோடு வாழ்பவராகவும்,அமைந்திடில் அம்மனிதனின் புறவாழ்வும் அமைதியாகவே அமைகிறது.
இவ்வாறு அவனுடைய அகவாழ்வும்,புறவாழ்வும் சிறப்பானதாக, கவலையற்றதாக வாய்க்கும்போது அவன் எல்லாவகையிலும் மன நிறைவைக்காண்கிறான்.அவனுடைய அக,புற வாழ்க்கையில் அலைபாய்ச்சல் இல்லாததால்,பரபரப்பு இல்லாததால் அவனுடைய மனம் மகிழ்ச்சியாக நிலைக்கிறது.அதனாலேயே அவனுக்கு இளமையும் குறைவதில்லை என்பதை பார்க்கிறோம்.
ஆதலால் தனி ஒருமனிதனின் மனம் சிறந்தால் உலகம் செழிக்கும். என்ற ஒப்பற்ற பொருளைக் காண்கிறோம்.தனிமனித வாழ்க்கைதான், சமுதாய,உலக,வாழ்க்கைக்கு ஆதாரம் என்ற பேருண்மையை பழந்தமிழர் அறிந்து வாழ்ந்திருந்தனர்.ஒருவர் விரிந்து பலர்,பலர் இணைந்து சமுதாயம்,சமுதாயம் இணைந்து ஊர்,ஊர்கள் இணைந்து நாடு,நாடுகள் இணைந்து உலகம்,.........!இதுதான் தமிழர் கண்ட நெறியாகும்.நாட்டுநலம் வீட்டுநலத்தை சார்ந்திருக்கிறது என்பது.

அவர்களுடைய கருத்தாக இருந்திருக்கிறது.இதைத்தான் கவிஞர் பாரதிதாசன், நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என கூறினார்.
ஆதலால் ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும், ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்வில் நெறியானவற்றை கடைப்பிடித்து தமக்கும்,பிறருக்கும் நன்மை பயக்கச்செய்து இனியவாழ்வு அடைய முயன்றாலே நல்ல உலகத்தை உருவாக்க உதவியவர் ஆவர். குடும்பத்தில் ஆணுக்கும்,பெண்ணுக்கும் என கடமைகள் சிலவுண்டு. அவைகளைச்செம்மையாகச்செய்தின் குடும்பம் சிறக்கும். பலகுடும்பங்கள் சிறந்தால் உலகம் சிறக்கும். ஆகவே நல்லுலகத்துக்கான விதை தனிமனித மனம் தான் என்பது தமிழர் கண்ட உண்மை. தற்காலத்தில் இந்நெறி பிறழ்ந்து போயுள்ளது.உலகநாடுகளின் அமைதியின்மைக்கு காரணம்,பல உள்ளங்களில் அமைதியின்மையே. அமைதியைக்கொண்டுவர அவர்கள் முயலவேண்டியதன் செயல் துவக்கம்,அவரவர் குடும்பங்களில் தான் என்பதை மறத்தலாகாது.
இன்று தமிழர் உலகெங்கணும் வாழ்கின்றனர்.அவர்கள் வாழும் நாடுகளில் பலகலாசாரங்களையும் கண்டு,அவைகளை மேற்கொண்டும் வாழ்கின்றனர்.ஆயினும் ஏதோ ஒரு ஒட்டாதநிலையை அவர்கள் உணர்கிறார்கள்.இதற்குரிய காரணங்கள் பலவாக இருக்கலாம். ஒரு காரணம் மட்டும் தெளிவாகிறது.உலகின் பல நாடுகளின் பல குடும்பங்கள் ஒருவழியில் சென்றுகொண்டிருக்க,தமிழர் மட்டும்,தம் தனித்தன்மையை உணர்ந்து,அதற்கேற்ப ஓரளவு வாழ்ந்தும் வருகிறார்கள் என கேள்விப்பட்டிருக்கிறோம்.பொருளாதாரமேம்பாட்டிற்காக புறவாழ்வில் பலமாறுதல்களை ஏற்றிருப்பினும்,அவர் அகவாழ்வில் பழையபண்புகளையே கொண்டுளர்.
தமிழ்மனம் மறக்காது தமிழர் வாழ்க!குடும்பவாழ்வில் செம்மை பெறுக!மனித வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்த தமிழ்நெறியை, குடும்பநெறியை தாமும் வாழ்ந்து காட்டி, மற்ற மனிதர்கட்கும் எடுத்துக்காட்டி உயர்வு பெறுக! அப்படி வாழின் – தமிழர் தமிழர் தாம்!– எனும் சிறப்பு பெறுவர்.

## பாங்கொக் கடிதம்:

அன்பு ஆசிரிய நண்பா!
தாய்லாந்த் தலைநகர் பாங்கொக்கில் வாழும் தமிழர்கள் சர்வதேசதமிழர் நல்லெண்ணஇதழ்,கண்டு மட்டிலா மகிழ்ச்சி அடைந்தோம். தங்கள் பாங்கொக் வரவு இங்குள்ள தமிழர்களை சர்வதேசதமிழர்களுடன் ஒன்றிணைக்க நிச்சயம் உதவும்! தாய்லாந்த் இணைப்பாளராக என்னை நியமித்தமைக்கும் நன்றிகள்! தாய்லாந்த் தமிழர்கள்,சர்வதேச தமிழர் மூலம் நட்பு,தொடர்பை வளர்த்துக்கொள்ள விரும்புகிறார்கள்.
திரைகடலோடியும் திரவியம் தேடிய தமிழர்கள்,ஆங்காங்கே தமது சமயத்தையும் வளர்க்கத் தவறவில்லை. அந்தவகையில் பாங்கொக் நகரில் அமைந்துள்ள ஸ்ரீமகா மாரியம்மன் ஆலயம் தமிழர்கட்கு மட்டுமன்றி இந்நாட்டவர்க்கும் அருள்புரியும் புண்ணியதலமாக விளங்குகிறது. 1889ம் ஆண்டில் திரு.சாமிப்படையாச்சி வைத்திப்படையாச்சி எனும் பெருவணிகரால் புதுப்பித்துக் கட்டப்பட்ட மகாமாரிஅம்மன் ஆலயத்தில் 23.09.95 கணபதிபூசையுடன் ஆரம்பமான,நவராத்திரிவிழா,3.10. 95 விஜயதசமியன்று தேரோட்டத்துடன் நிறைவுற்றது.சிலோம் றோட், பான்றோட், சதோண்றோட் ஊடாக 3 அலங்காரதேர்கள் கொண்டபவனி ஸ்ரீமகாஉமாதேவி,விநாயகர்,கிருஷ்ணா:சுப்ரமணியர்:காத்தவராயர் திருவுருவங்களுடன் பலலட்சக் கணக்கானமக்களுடன் வலம் வந்தது. மாலை 6மணிக்கு தொடங்கிய பவனி 10மணிநேரத்தில் கோவிலை அடைந்தது.காவடி,கரகம்,அக்னிசட்டியை பக்தர்கள் காவும்காட்சி, கண்கொள்ளாக்காட்சி அன்றோ! முற்காலத்தில் தமிழ்வழங்கிய இந்நாடு, இலங்கையின் நீர்கொழும்பு போல் மொழி மருவிவிட்டது பல தமிழர்கள் உலகின் பலபகுதிகளில் இருந்தும் இங்கு வருகை தருகிறார்கள்.இங்கு துணிமணிகள் சிங்கப்பூரை விட மலிவாக இருப்பதாலும்,வாழ்க்கைசெலவு மிககுறைவு என்பதாலும்,புராதனசின்னங்களை பார்க்கவும் பலஉல்லாசபயணிகளும், வர்த்தகநோக்கில் பலரும் வருவர். ஈழத்தமிழர் இங்குவந்து தமது துணைகளை மணமும் புரிவர்!
அன்புடன்......................வே.நாகராசா

Madrascafe,31/10,SoiVaithy-13,Silom rd,Bangkok 10500;Fax.662.2364771



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள் உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள், நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

## தென்கிழக்காசிய பயண அனுபவங்கள்!

பல நிறமும்,பல வேறுபாடுகளும் பலகலாசாரமும்,பலவித உணவு வகைகளும் நிரம்பிய வியப்புக்குரிய சிங்கப்பூர்! என தம்நாட்டை அறிமுகம் செய்கிறார்கள்,சிங்கப்பூரியர். இங்கு பலவித விழாக்கள்,வேடிக்கைகள் அவ்வப்போது நடக்கும். யூலை1-31வரையான உணவுவிழாவில் இத்தாலிய,மெடிற்றனேனியன், மெக்சிகன்,அமெரிக்கன்,இந்தியன் மற்றும் பல உணவுவகைகள் இடம்பெறும்.

பாரிய சிங்கப்பூர் விற்பனைகாலம் யூலை14-ஆகஸ்ட்13வரை ஆகும். ஒச்சாட் றோட்,பூகிஸ் சந்தி ,தியோங் பாரு பிளாசா,அரபுவீதி, சைனா ரவுண் மற்றும் தமிழர் அதிகம் செல்லும் சிரங்கூனிலும் (தேக்கா மார்கட்,முஸ்தபா கடை) நடைபெறும்.அனேகமான கடைகள் காலை 10-மாலை9-10வரை திறந்திருப்பது பலருக்கும் வசதியாகவே இருக்கிறது.சிரங்கூன் தமிழர்வாழும் இடமாயும்,தமிழர் கடைகள்,உணவுசாலைகள்,விடுதிகள்,நியாயமானவிலையில் இருப்பதாலும் இங்குதான் அதிகதமிழர் இந்தியா,இலங்கை,மலேசியா,கனடா,ஐரோப்பா,மத்தியகிழக்குநாடுகளில் இருந்து வந்துதங்கிச்செல்வர்.

முஸ்தபா கடை கரன்சிமாற்றத்திலிருந்து,நகை,மின்பொருள் வாங்குவது வரை மிகப்பிரபலமாகவே உள்ளது.தமிழ்நாட்டு இஸ்லாமியதமிழரான இவர் பலஇனமக்களிடையேயும் வர்த்தகத்துறையில் பிரபலமானவர்.

1819ல் சேர்.ஸ்ராம்போட் றபிள்ஸ் இந்தத்தீவை பிரிட்டிஷ்கிழக்கிந்திய கம்பனிக்கு உரிமைகொண்டாடிய போது இது சில மீனவர்களையும், கடல்குறவர்களையும் கொண்ட ஒருஅடர்ந்தகாடும்,சதுப்புநிலமுமாய் இருந்ததாம்.இன்றோ துடிப்பான நவீனநகரமாக,ஆசியாவின் பொருளாதாரபுலியாக,வர்த்தகம்-போக்குவரத்து-வங்கி-உல்லாசப்பிரயாணம்-தகவல்தொடர்புதுறைகளில் பிராந்தியமையமாக விளங்குகிறது.இங்கு வாழும் சீன,மலே,தமிழர்கள்அனேகமாக சமஉரிமையுடன்,வேறுபாடற்று வாழ்வதும்,நீண்டநோக்கில் லீ குவான்யு போன்ற தலைவர்கள் சிந்தித்ததும்,நவீனமுறைகட்கு உடன் இசைவுபடுத்திக்கொள்வதும் தான் இந்தநாட்டுவெற்றிக்கு மூலகாரணம்!

இதனைகுறுகியநோக்கும்,தம்இனசுயநலமும்,பழைமைபேசும்மனப்பான்மையும் உள்ள பலஆசியத்தலைவர்கள் உணர்ந்தால் தத்தம் நாட்டையும் நிச்சயம் முன்னேற்றலாம் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லைஉணர்வார்களா..........?

சிங்கப்பூர் அமைந்துள்ள இடம், கிழக்குக்கும்,மேற்குக்குமான கடல் பாதையில் உள்ளதும் இதன் வெற்றிக்கு மறுகாரணமாகும்.

பிரிட்டிஷ்காரர் வரமுன் பலநூற்றாண்டுகட்குமுன்பே சீனர்,அரபுக்கள், இந்தியர் கப்பல்கள் வந்துபோயின. 14ம்நூற்றாண்டில் தேமாசெக்(கடல் நகரம்)என வழங்கப்பட்ட இத்தீவு, சுமத்திரா தீவு இளவரசனால் சிங்கபுர என அழைக்கப்பட்டு பின்பு மருவிச் சிங்கப்பூர் ஆகியது.

1911ல் இங்கு 250,000 சனத்தொகை காணப்பட்டது.சீனாவின் தென்மாகாணங்கள்,இந்தோனேசியா, மலேயா,இந்தியாவிலிருந்துவந்த 54 விதமானமொழிபேசும் 48இனமக்கள் இங்கு காணப்பட்டனர்.

1942ல் இது யப்பானியர் வசம் சென்றதுயுத்தம் முடிந்ததும் 1945ல் பிரிட்டிஷ்காலனி ஆகியது.1959ல் மலேயன்அரசுடன் கூட்டாட்சியான சுயஅரசாக பரிணமித்தது.பின்1965ல் சுதந்திரகுடியரசாக மாறியது.

சுதந்திரம்அடைந்தபின் தான் அதீத வளர்ச்சியும்,மாற்றமும் கண்டது. உலகிலேயே திறமானதும்,பரபரப்பாக இயங்குவதுமான கடல்துறைமுகம்,விமானநிலையம் இங்குதான் உள்ளது.பிரதானமாக எண்ணை சுத்திகரிப்பு-விநியோகம்,எலக்ரோனிக் பகுதிகள் விநியோகம்,கப்பல் கட்டல்-திருத்தல்,தகவல்தொடர்பு, நிதி-வங்கித்துறை(130வங்கிகள் உண்டு)இங்கு முக்கியதொழில்கள்.

விரைவானவளர்ச்சி,வான் தொடும் கட்டிடங்கள் எனினும் இயற்கையான பூங்காக்கள்,மரங்களை பாதுகாப்பதாலும்,சுத்தமாக தம்நாட்டை வைத்திருப்பதாலும்,உலகின் சுத்தமான,பசுமையானநகர் எனும் பெயரையும் சிங்கப்பூர் பெற்றுள்ளது. இதில் தமிழர்கட்கு முக்கியபங்கு உண்டு,என்பதைமறக்கலாகாது.

திறமான போக்குவரத்து,அருமையான ஹோட்டல்கள்,ருசியான உணவு,வியப்பான கலாசாரவேறுபாடுகள்,வேடிக்கைகள்,முக்கிய இடங்கள்,தரமான,நியாயவிலைகடைகள் நட்பானசிரித்தமுகங்கள்,உலகெங்கும் இருந்து 6மிலியன் உல்லாசப்பிரயாணிகளைக் கவர்வதில் என்ன புதுமை இருக்கமுடியும்!

தனது சனத்தொகையைவிட சுமார் இருமடங்குக்கு மேல் உல்லாசப்பிரயாணிகளை வரவேற்கும் சிங்கப்பூர் எங்கே?குறுகியநோக்கிலும்,அநியாமையிலும் தம் கதவுகளை இறுக மூடும் பலநாடுகள் எங்கே? பல்லாயிரக்கணக்கான ஈழதமிழர்கள் உலகின் பலமூலையிலிருந்தும்,இந்தியா வந்து ஆலயதரிசனம் செய்யவும்,தம்உறவினரை காணவும் விசாகோரி விண்ணப்பிக்க,அதனை மறுத்துவிட்டு-அதாவது நாடுதேடிவரும் அந்நியசெலாவணியை குறுகிய அரசியல் காரணங்களைக் கூறி உதைத்து எறிந்துவிட்டு- இந்தியா- பலதொன் எடையுள்ள தங்கத்தை இங்கிலாந்து வங்கியில் ஒருதடவை பாரியவிமானபோக்குவரத்து செலவுடன் அந்நியச்செலாவணிக்காக அடைவுவைத்து மீட்டது.இத்தகைய கொள்கைகள் எப்படி ஒரு நாட்டை முன்னேற்றும்? அடிப்படையில் இந்தியாவில் பற்றும்,பாசமுமுள்ளதமிழர்கள் இலங்கையில் பலலட்சம் பேர் தற்போது அவதியுறுகையில் குரல் எழுப்பாத இந்தியமத்தியஅரசு,அடிப்படையில் இந்திய எதிர்ப்பும் ,வெறுப்பும் உள்ள சிலமக்களின் அரசுகட்கு உதவி தேவைப்படின் உற்ற நண்பன் போல் பாய்ந்தோடி உதவுவது விசித்திரமாகவே உள்ளது.பிரதமர் ராஜீவ் காந்திக்கு துவக்கால் அடித்த சிங்களராணுவ வீரன்,விரைவில் விடுதலையானதும்,பின் பூமிபுத்திரா கட்சிதொடங்கி சிங்களமக்களின் அன்புக்கு பாத்திரமானதும் உலகே அறியும்.

தமிழ்நாட்டு உல்லாசப்பிரயாணி தனபதி,தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக இலங்கையின் திஸ்ஸமகாராமவில் சவரக்கத்தியால் ,கழுத்தறுபட்டு இறந்தார் எனில் இந்த நாட்டில் உல்லாசப்பிரயாணம் வளர்வது எவ்வாறு?நாடு ஒற்றுமையுடன் முன்னேற பலமக்கள் ஒருவரை ஒருவர் மதிப்பது முக்கியம்! என்பதை சிங்கப்பூர் தெளிவாக்குகிறது.

-என்.எஸ்.பிரபு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம்
யுனெஸ்கோ.பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

## சர்வதேசதமிழர் கவியரங்கம்

--------------------

### வாடுகின்ற உன் இனத்துக்கும் இட்டு வாழ்!

தேடியதேட்டமும்தேய்ந்துசெய்திட்ட
தோட்டமும் வீடும் துறந்து
நாடியதெய்வத்திலும் வெறுப்பாகி
நலிவுற்று நாதியற்று
ஓடியஇடமெல்லாம் உருக்குலைந்து
மனம் ஒடிந்து
நீடியதுன்பமும் நீங்காததாகமுமாய்
வாழுகிறார் ஈழத்தமிழர்கள்!

பீடும்பிணியும் தினம்பிரிகின்ற பேருறவும்
தாங்கிக்கொண்டு
பேடும் போராடும் போர்க்களத்தில்
சொந்தத் தமிழ் மண்ணில்
போடும் குண்டுக்குத்தப்பியோடிப்
பலதடவை மீண்டும் விடுதேடி
தாடும்நலமும் ஒருநாள்நாடும் என நம்பி
வாழுகிறார் ஈழத்தமிழர்கள்!

தேடினால்பொருட்களில்லை தினம்திணறி
பசியினால் மடிகின்றார் சிறுவர்கள்
வாடினால் வேதனைக்கு மருந்தில்லை
வருவித்த மருந்தும் வந்துசேர்வதில்லை
மூடினால்திறக்காத முற்றுபொருள்கட்கும்
தடையங்கே இன்னும்முடியவில்லை.அவர்
பாடினால் படும்பாடு படைத்த
பரமனுக்கும் ஏன் புரியவில்லை?

கடலில் தொழில் இல்லை
கடன்கொடுக்க ஆளுமில்லை
குடலில் பசிவந்தால்
குடித்துண்ண நல்லபண்டமில்லை
உடலில் காயம் வந்தால்
உருப்படியாய் மருந்துமில்லை
விடலில் பூத்த நம்மினப் பிஞ்செல்லாம்
ஊவினைபோல் தினமும் மடியுதங்கே

சூடும் சுற்றிவரும் ஏவுகுண்டும்
வீடும் அதிரவிழும் தமிழ் நிலத்தில்
சூடும் பட்டப்படிப்பும் பரீட்சையும்
பத்திரமாய் நடந்திட்டாலும்
காடும் கரம்பையுமாய் நாடாச்சு
மின்னும்விழாக்கோலம் எல்லாம் போயாச்சு
ஏடும் அதனால் ஏற்றிய வாழ்வும் போய்
மூடும்உடுப்புக்கு தினம்தேடும் இனமாச்சு

ஓடுகின்றஇடமெல்லாம் இப்போரின்பெயரால்
ஓடி வீடும் பொருளும் சொந்தமாக்க
தேடுகின்ற பணமெல்லாம் நாடிவந்த
நாட்டிலேயே தேங்கவைத்து
மூடுகின்ற தமிழ்இனமே சொந்தநாடு
நாடு எனப் போராடி ஈழமண்ணில்
வாடுகின்ற உன்இனத்துக்கும்
இட்டு வாழத் தயங்காதே!

**செ.நாகேந்திரன்-லண்டன்**

--------------------

### யாரைத்தான் நம்புவதோ?

நாட்டைவிட்டு ஓடு!என்று
நாஸிகள் தயந்திடுவர்!
சேட்டைவிட்டு குண்டுவைத்து
சிரித்தே நின்றிடுவர்
அதைக்காட்டி அரசியலில்
நல்லவராய் பலர் புகழ்பெறுவர்
சாட்டைகொண்டும் சாடிடுவர்
இந்நாட்டு நல்லவர்கள்
கள்ளன் போல் கதவுடைத்து-நம்மை
அள்ளி அனுப்பும் பொலிக!
உள்ளமது நொந்து
உதவிடும் சிலஅரசு
குள்ளமூளை கொண்டு
நுள்ளிவிடும் காளிகாகன்!(வெளிநாட்டார்
எதிர்ப்புக்கட்சித்தலைவன்)
காகம் எனக்கத்தினால் தான்
பிழைக்கும் சகுனம் எமக்குண்டு!
சோஸ்.பினிட்ஸ் என்று
இனதுவேசஎதிர்ப்பாளர் பளிச்சிடுவர்!
தடவித்தடவி முதுகில்
குத்துவரோ?நாம் அறியோம்!
மெத்தையுள் பதுங்கி
மூட்டையுள் ஒளிப்பினும்
மூக்கினுள் நுழையும் மகரந்தங்கள்!
துரத்தித்துரத்தி தும்மப்பண்ணும்!
கண்ணைக்கடித்து
கடித்துக்கலைக்கும்!
மூக்கில் நின்று மூச்சைத்தடுக்கும்
கொலையும் செய்து கொட்டமடிக்கும்
அழகான இயற்கையின் பூக்களே!
நீங்களுமா? எங்களை வெறுக்கிறீர்கள்!
பனிகாலத்தில் விறைக்கும் குளிர்,
கோடையில் கடிக்கும் அலேஜி!
இயற்கையே பகைக்கையிலே
யாரைத்தான் நம்புவதோ?

**தி.திலீபன்- ஒஸ்லோ**

--------------------

### இனியொரு விதிசெய்வோம்!

திரையரங்கில் கள்ள டிக்கட்,
புதர் மறைவில் சாராயம்,
ஒருபுறத்தில் பெண்வியாபாரம்,
இந்தப்பிழைப்பால் வந்தது செல்வம்!
அரசியல் ஆசையும் வந்தது;
கட்சியொன்றினில் ஐக்கியமானார்!
கட்சிக்குள்ளே கோஷ்டிவளர்த்து
கோஷ்டிச்சண்டையில் தலைவரானார்
அந்தத்தலைவனின் பிறந்தநாள்விழா
என்ன பரிசு தரலாம் என்று?
நண்பர்கள் சூழ யோசனைசெய்தேன்
பகட்டாய் பற்பல பரிசுகள் சொன்னார்
சொன்னது அனைத்தும் அவரிடமுண்டு
இல்லாததொன்றும் அவரிடமில்லை
புதிதாய் ஏதும் சொல்லுக என்றேன்.
மனதின் சாட்சி என்னிடம் கேட்டது
அவர்க்கு தேசபக்தி சிறிதும் உண்டா?
பாதபூசை ஒன்றே அறிவார்!
சுயமரியாதையை சுத்தமாய் துடைத்தவர்
ஆடம்பரமே அரசியல் என்றவர்
லஞ்சம் ஊழலே வாழ்வென வகுத்தவர்
மதங்கள் சாதிகள் இவற்றுக்கிடையே
சதிவலைபின்னி கலவரம் தூண்டி
பலஉயிர் பறித்ததை நீயும் அறிவாய்
நீதியும் நேர்மையும் உண்டா என்றால்
அறவே இல்லை இது அனைவருமறிவர்
அறமும் அறிவும் பண்பும் பயமும்
இல்லையவர்க்கு இதுவும் உண்மை
மானமும் இல்லை தன்மானமுமில்லை
இவற்றை வாங்க உன்னால் ஆகுமா?
என்ன வாங்க? விரைந்துசொல் என்றேன்
எந்தன் காதில் ரகசியம் சொன்னது
தயக்கம் கொண்டேன் கட்டளையிட்டது
ஓடினேன்!ஓடினேன்! வாங்கிடும்வரையில்
வாங்கிய பின் தான் நிம்மதி!நிம்மதி!
அரசியல் பிழைத்த தலைவனின் உயிரை
வாங்கினேன்!பிறந்ததன் பயனடைந்தேன்!!
என்னைப்போல் எல்லா நண்பரும்
ஆளுக்கொன்றாய் வாங்கிவிட்டால்
பிரச்சனை இந்தப்பூமியில் இல்லை!
புறப்படு நண்பா!புறப்படு உடனே!
பிறவிப்பயனை அடைந்திடு நீயும்!!

**கதிர்.சம்பத்குமார்-புதுடில்லி**

--------------------

### சாதியா? சதியா?

சாதியை பார்த்துவிட்டா
சூரியன் ஒளி வீசுகிறது?
தென்றல் இதம் தருகிறது?
மலர் மணம் வீசுகிறது?
மரம் கனி தருகிறது?
மனிதமனங்களில் மட்டும்
சாதி பேதமை ஏனோ?
ஆதியில் இல்லை இந்தச்சாதி
பாதியில் படைத்ததுதான் சாதி
மேல்சாதி கீழ்சாதி என்பதெல்லாம்
மேல்சாதிக்காரன் படைத்த சதி!
ஒற்றுமைக்கு உலைவைக்கும்
சாதி உணர்வினை சாகடித்திடுவோம்!
உதிரத்தின் நிறம் சிவப்பு என்பதை
மோதித்தான் உணரவேண்டுமா?
சாதி மோதலுக்கு முடிவுகட்டுவோம்!
மனிதநேயத்தை மனிதனில் வளர்ப்போம்!

**இரா.இரவி......................மதுரை**

--------------------

### ஓ! அற்பநிமிடமே!

ஒருவனுக்கு ஒருத்தி
ஒருத்திக்கு ஒருவனென
வாழ்ந்தவன்
ஆரோக்கியவாழ்வு கண்டான்!
அமைதி.மகிழ்வடைந்தான்
வாழ்விலும் நிறைவடைந்தான்
இன்றையவன் புழுதிவாரி தூற்றி
ஒருத்திக்கு பலர்
பலருக்கு ஒருத்தியென
அற்ப சந்தோசம் கண்டு
அதுவே நிலையானது
முடிவானது என எண்ணி
வீழ்ந்தான் சவக்குழியில்!
ஆம்!எயிட்ஸ் எனும் சவக்குழி!
அவனுக்கு யமனானது!

**ச.வெள்ளிங்கிரி-கேரளா**

--------------------

### வெற்றிப்பாதை

இளைஞனே!கவலை.தோல்வி
என கண்ணீர் வடிக்கிறாயே
வாழ்வின் தோல்விகள் யாவும்
தடைக்கற்கள் அல்ல!
அவை வெற்றியின் படிக்கற்கள்
உன் சாதனைகள் யாவும்
கண்ணீரில் எழுதப்பட போவதில்லை
சோதனைகள் நிரந்தரம் அல்ல
நம்பிக்கையுடன் முயற்சி செய்தால்
தடைகளை வெல்லலாம்
எந்தச்செயலையும் நாளை.நாளை
என்று தள்ளிப்போடாதே!
எதையும் இன்றே செய்!!
லட்சியப்பாதையில் சாதனைகள் குவி!

**வீணாநிகாரி-லண்டன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழரில் வரும் கதைகளின் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர் கடிதங்கள் மிகவும் வரவேற்கப்படும்!
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக! தங்கள் விமர்சனம், ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்!
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

## உம் மனதில் சோகமில்லை!

வண்ணப்பறவைகளே! உமக்கோ மனதில்
சோகமில்லை!
எண்ணம் கவலை இல்லை! எதிலும்
ஏற்றமிறக்கமில்லை!
விண்ணில் பறக்கின்றீர்! பின்பு மண்ணில்
தவழ்கின்றீர்!
கண்ணுக்கினியனவாய் எங்கும் காட்சி
தருகின்றீர்!

பச்சைப்பசும் புற்கள் அதிலே பனித்த
சிறுதுளிகள்!
இச்சைப்படும்படியாய் மலர்கள் எத்தனை
கோடியடி!
அத்தனை கோடியிலும் நீவிர் அமர்ந்து
விளையாடி
நித்தம் களிக்கின்றீர் உமது சித்தம்
மகிழ்கின்றீர்!

உச்சிமரக்கிளைமேல் நீவிர் ஓய்யார
மாயிருந்து
கத்திச்சத்தமிடும் இனிமை தமிழ்க்கவியை
வெல்லுமடி!
பஞ்சம் பசி இன்றி நீவிர் பாடி ஆடுவது
எத்திக்கு மனிதர்களும் காணாத
இன்பத்தின் எல்லையடி!

ஆடிமகிழ்கின்றீர்! பின்பு கூடிக்களிக்கின்றீர்!
தேடிஅலைகின்றீர் எதையோ, பின் சிந்தை
மகிழ்வுறவே
பாடிக்களிக்கின்றீர்! நறும் வண்ண
மலர்களிலே–தேனை
வாரிக்குடிக்கின்றீர்! உடலில் வைரத்தைப்
பாய்ச்சுகிறீர்!

போதை தலைக்கேற புவியைவிட்டகன்றே
வானைத்தொடுகின்றீர் பின் மண்ணில்
விழுகின்றீர்!
ஆசைகாட்டுகின்றீர் மனிதரின் ஆவலைத்
தூண்டுகிறீர்!
பாசை தெரியார்க்கும் புதுக்கவி
பாங்குடன் கூறுகிறீர்!

சின்னப்பறவைகளே உம்மைப்போல்
சித்தம் மகிழ்ந்துநிதம்
எண்ணம் கவலையற்று உலகு எங்கும்
திரிந்தோடி
வண்ண மலரழகில் தூய மனதைப்
பறிகொடுத்து
எண்ணம் களிகூர வாழும்நிலைவருமோ

**மயில்.அமரசிங்கம்–ஒஸ்லோ**

---

## எங்கும் போய்ச்சேர வழியுமில்லை!

அடிபட்டு அடிபட்டு
ஆடிப்போனவர்கள் நாங்கள்!
இலங்கையில் இருபக்கத்தாலும்
அடிபட்டவர்கள் நாங்கள்!!
இல்லங்கள் எல்லாம் உடைந்து
இருந்தவர்கள் சிலர் குறைந்து
இறந்தும் இன்னும் உயிர்வாழ
இழுபட்டு வந்த அடிபட்ட
அனாதை சனங்கள் நாங்கள்!
இன்னும் நாம் என்னவென்று
சொல்லொணா பீதியிலே
ஏன் வாழுகின்றோம்? புரியாதபுதிர்....!!
உள்ளது ஒரு உடமை! அதுதான்
ஊனமுற்ற உடலும் உள்ளமும்!
ஓடும்வீடும் உடைந்துபோய்
ஓடி ஓடி வந்தோம் அகதிமுகாமுக்கு
ஓடி ஓடி களைத்த எம்மை இன்னும்
விரட்டி விரட்டி துரத்துகிறது,
அன்றாட பிரச்சனைகள்!
அன்னமும் ஆடையும் பிச்சையாக
அளிப்பதையும் அள்ளிடுவார்,
பெரியவராய் தோற்றமிட்ட
சிறுமனசுக்காரர்!
மரணத்தில் வழுக்கி
மண்ணிலே வீழ்ந்த எம்மை
மீண்டும் மீண்டும் மரணதேவன்
விரட்டி விளையாடுவான்!
காடும்,மேடும் காலனை வென்றுவந்த
நாம் கறுப்பாய் தான் இருப்போம்!
சோதனை எனும் போர்வையில்
எம்மை கறுப்பு கொட்டியா(புலி)என்று
கறுப்பு போர்வையில் தம்மை
மறைத்த தலையாட்டிகள்!
சிறைப்படுத்தி காணாமல்
போனவர்பட்டியலில் மறுதினம் எம்பெயர்!
கண்ணீர் சிந்தி சிந்தி காய்ந்துபோனது
கண்கள் மட்டுமல்ல!
நெஞ்சிலுள்ள ஈரமும் தான்!
இருந்தும் நாம் இன்னமும்
ஊமையாய் வாழ காரணம்,
அடிபட்ட நமக்கு போராட வலுவுமில்லை
எங்கும் போய்ச்சேர வழியுமில்லை!
ஆறுதலுக்கு ஆளுமில்லை
தூக்கிவிட கையுமில்லை
உண்மை உரை(றை)க்கும்
உலகமும் இல்லை!!

**மதுமாரி
திருகோணமலை**

---

## ஓ.....சூரியனே.........!!

ஓ...! சூரியனே......!
உன் மஞ்சள்நிறம் கலந்த
இரத்தச்சிவப்பு கிரகணங்களை
நீ கக்கியபின்புதான்
விடியல் துவங்குகிறது!
தூங்கும் இமைகளும்,
துவண்ட இருவிழிகளும்
உன்னால்தான் உயிர்பெறுகின்றன!
உன் ஒளியால் இங்கு
இருளோ விலகுகிறது!
சிலசமயம் உன் சினத்தால்
பூமியில் சுட்டெரிக்கின்றாய்
எவ்வளவு தான் நீ சுட்டாலும்
சுடுநெஞ்சம் படைத்தவர்களை
இங்கு உன்சூடு சுடுவதில்லை!
இருள் விலகத்தரும்
உன் பரந்த ஒளியைப்
புரிந்துகொள்ளாதவரை
வீணர்கள் நடத்தும் வாழ்வு
வீண்தானே......!

**சு.இலக்குமணசுவாமி
மதுரை**

## வாழ்க்கை கரையைத் தேடி.

வாழ்க்கை எனும் நதியி னிலே– எதிர்
நீச்சல் போட்டு நின்மதி தேடும்
மானி டரைப் போல இங்கே
போரா டிடும் கடல் அலையே

நீண்ட காலம் நீச்ச லடித்தே
நின்ம திக்காய் போரா டியவன்
நின்றி டுவான் இடை யினிலே–அவன்
நினைத்தி டுவான் முடியா தென்றே–ஆனால்

தரை என்னும் கரையை நீயும்
விரை வினிலே தொட்டி டவே
காலம் தோறும் போராடு கின்ற
நாளும் உனக்கு தோல்வி தானே

தோல்வி தனைக் கண்டு நீயும்
சோர்வ டைந்து போகா மலே
துணிவு டனே போரா டிடும்–மன
உறுதி யைநான் மெச்சு கின்றேன்–ஆனால்

நாளன்டு கொண்டே நான் முழுதும்
மீண்டும் மீண்டும் முயற்சித் தாலும்
முடிந்த துவா உன்னால் அந்த
முடிவு என்னும் கரையை அடைய

எப்ப டித்தான் முயற்சித் தாலும்
ஏமாற் றம்தான் கிடைத் ததுவே
அது போன்றே என் மனமும்
நாளும் உன்னைப் போலத் தானே

நின்மதி என்னும் கரையை அடைய
மீண்டும் மீண்டும் முயற்சிக் கின்றேன்–அதை
அடைவேன் என்ற நம்பிக்கை யுடன்
அடைவேனா நானுமந்த கரையை முடிவில்????-

ஆக்கம்
பொன். சிவா.
எகர்சுண்ட், நோர்வே.

## கறுப்பு யூலை.

கறுப்பு யூலை கறுப்பு யூலை
உயிர் எடுத்த கறுப்பு யூலை–தமிழர்
உதிரம் குடித்த கறுப்பு யூலை–உனை
மறக்க லாமோ கறுப்பு யூலை

பன்னிரு ஆண்டுகள் போய் மறைந்தாலும்
அவ்விரு நாட்களை நாம் மறப்போமோ
எண்பத்து மூன்று ஆடி மாதம்
காடையர் வெறி ஆடிய மாதம்

வெலிக் கடையின் சிறையி னிலே
பலிக் கடாவாய் எம்ம வரை
கொலை வெறித்த கொலை வெறியர்
பலி யெடுத்தது அந்த மாதம்

எரித்து விட்டு தமிழர் கடையை–அதில்
எறிந்து எரித்தார் எம்மி னத்தை
பார்க்கு இடம் எங்கும் அனாதையாய்
பரந்து கிடந்தன தமிழ் உடல்கள்

எண்பத்து மூன்று யூலை யிலே
தன்னுயிர் ஈந்த மறவர் களே
ஈழம் எனும் கோட்டை யிற்கு
அத்திவாரம் போட்ட அடிக்கல் நீங்கள்

கட்டு கின்றான் கட்டி டத்தை
தமிழ் ஈழத் தலைவ னவன்
இன்னு மொரு கறுப்பு யூலை
எங்கு ஏற்கு வேண்டா மோ

புயல் காற்று வீசி னாலும்
சாய்ந்தி டாத கோட்டை யிது
சிம்மாசனத்தி லிருந்து பார்த்து நீங்கள்
விடிவு படையும் காலம் வரும்.

ஆக்கம்.
பொன். சிவா.
எகர்சுண்ட். நோர்வே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முறிக்க முடியாப் பனைமரம்: கடவுளிடம் ஒரு பிரார்த்தனை ஐப்பசி 1995

பீற்றர் ஷல்க், உப்சாலா, சுவீடன்

கடவுளே!
வரலாறு ஆகிறது ஐப்பசி 1995
தாக்கப்படுகிறது நமது யாழ்ப்பாணம்
சிங்களவரினால்,
செபியரால
வடக்கொவர் தாக்கப்பட்டது போல

கடவுளே!
பிரார்த்திக்கிறோம் உன்னை,
பலம் கொண்டிருப்பினும் குழப்பமடைந்துள்ள,
புதிய இலங்கையின் முதல்வர்,
மறைந்த முதல்வரின் புதல்வி,
மாண்புமிகு திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பண்டாரநாயக்காவை,
அமைதி உருவாக்க
அறிவுறுத்தும்படி.
அவரது தந்தை,
மறைந்த முதல்வர் திரு பண்டாரநாயக்கா;
அவரோ 1958-ல்,
மத வெறி பிடித்த,
பௌத்த பிக்குகள் இருநூறுவர் ரோஸ்மிட் இடத்திற்குள்
புகுந்து ஆவேசமிட்டபோது,
தமிழருக்கு நீதி தர வரைந்த,
கிழித்தெறிந்தார் துண்டுகளாக,
தந்தை செல்வாவுடனான ஒப்பந்தத்தை.

சந்திரிகா,
முந்தைய முதல்வரின் மகளும் கூட.
1971-ல்,
அவர் தாய் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா,
அழித்தொழித்தார் 10,000 சிங்கள இளைஞரை,
அவர் கலகம் விளைவித்த காரணத்தால்.
அது மட்டோ அவரின் கைங்கரியம்?
அரச மதமாகியது பௌத்தம் 1972-ல்;
அரச மொழியாகியது சிங்களம் மட்டும்,
அசிங்களரைத் தலைகுனியவைத்தது தரப்படுத்தல்,
அடியோடு மறைந்தன தமிழரின் உரிமைகள்
அரசியல் சட்டத்திலிருந்து.

ஆயினும்,
அவருக்கு உண்டே நல்லோர் உறவும்!
இந்தச் சந்திரிகா,
இறந்துபோன குமாரணதுங்கவின்
இளம் கைம்பெண்.
அவர் கணவரின் மன உரம்,
இன்றும்,
அதிவீரம் செறிந்த கதைகளிலும் பாடல்களிலும்,
அடிக்கடி நினைக்கப்படுகிறது யாழ்ப்பாணத்தில்;
அவர் துணைவரின் உணர்வு,
அழகியதோர் பாலம்,
அருந்தமிழர் சிங்களருக்கு இடையில்.
1986-ல் இயக்கம்,
அவரை,
அதன் நம்பிக்கை ஆக்கியது.
எதிர்பார்ப்பிழந்த நிலைக்கு எதிராக.
உயர் மனிதத்துவத்தின் சாட்சியான
அவரை,
அது எங்கள் தோழராக்கியது,
ஆயினும்,

அவர் துன்பகரமாக இறந்தார் தியாகியாக
இன்னும் அடையாளம் தெரியாத
அதிபாதக கொலைஞரின் கரங்களினால்

கடவுளே!
தமிழர்களுடனான உறவில்,
இந்தச் சந்திரிகா,
உணர்ச்சிகள், கௌரவம் அனைத்தையும் விலக்கி,
உண்மைக்கு புறம்பாகாமலும், நியாயமாகவும், நடந்து,
அவர் துணைவரின் நினைவை
கௌரவிக்கச் செய்.
இன்றே தமிழர்,
அவர் அன்பையும் இணக்கத்தையும்
இரக்கவில்லை,
அதற்கான காலம் கடந்தே போயிற்று.
இப்போது,
அவர்கள் வலியுறுத்துவதோ
தம் மேல் காட்டும் கண்ணியத்தையே
தமிழர் மேலான மதிப்பையே.
(தம்மைப் பற்றிய
அவர் மாற்றத்தையே.

கடவுளே!
புத்தனின் உயரிய, திரிபற்ற போதனைகளை,
அவர் அறிந்து கொள்ள,
அருள் கூர்ந்து வழி நடத்துவாய்.
அது,
அமைதி கொடுக்கும் அவர் மனத்திற்கு.

1986-ல்,
கூறினர் அவர் கோபத்துடன்,
கொடுக்கமுடியாது தமிழருக்கு ஒரு சதமேனும் என்று.
இன்றோ 1995-ல்,
ஒரு மாணவியின் மனநிலை நீங்கி,
குழந்தைத்தனமையில் இருந்து விடுபட்டு,
தப்ரபேன் என்றும், ஈழம், சிங்களம், லங்கா என்றும்
உலகில் புகழ் பெறும்,
புத்தகோசர், மகாநாமர், சாரத்தர், சேக்கிழார் போன்ற
தென்னாசியரின் ஞானம் உள்ளிட்ட,
பாலி, சிங்களம், தமிழ் மொழிகளின்
வளம் செறிந்ததும்,
பழம் பெரும் பண்பாட்டு வரலாறு கொண்டதுமான,
தீவின் நலத்தைப் பேணும் பொறுப்பு
வாய்க்கப்பட்டுள்ளவர்;
எனவே அவர்,
ஆத்திரத்தில் இருந்தும், பெருங் கோபத்தில் இருந்தும்
விடுபட அருள்வாய்;
சங்கமித்தை போல உள்ளத்தினுள்
விடுபடவும்,
போதிமரத்துடன் அது 'சுது நெலும'
இணைந்திடவும் அருள்வாய்;
இனிமையும் இணக்கமும் நிறைந்து ததும்ப
மென்மை மேம்பட மொழி பேசி,
அன்புடன் பயிற்றுவிப்பாய்.

தன் கோபத்தை அடக்கிட
சொந்த பத்தரைக் கொன்றிடும்,
குறும்பிய மனமுடைக் காளி போல.

*யாழ்ப்பாணத்தில் சாட்சிகளுக்கும் சத்தியாகிரகிகளுக்கும் நினைவுமலர்.*



தற்போது,
கற்பனை எதிரிகள் தமிழருக்கு
எதிராக,
கொடிய வார்த்தை பேசிடும்,
கூடிய கோபத்தில் உள்ள சந்திரிகாவுக்கு
உதவுவாய,
அவர் மனதைக் குழப்பும் கோபத்தைத்
தணிப்பாய,
வலியுறுத்துகிறார் தவறாக நம்பி,
தனது போர் 'விடுவிக்கும்' போர் என,
ஆனால்,
அது ஓர் அடக்குமுறைப் போர்,
விடுவிக்கப்படவுள்ள யாழ் பிரஜைகளின் படி.

அவர்
பிழையாகச் சிந்திக்கிறார்.
போரின் மூலமே
அமைதியை நிலை நாட்டலாம் என புத்தன் போதித்தான்
எனும் தீய 'யக்கவிலுவ'
உணர்ச்சி ஊட்டப்பட்டு.

உணர்வுக் குழப்பத்திலும் இருந்த
அவர்,
அமைதியைப் பிரசைகள் கூற வேண்டியபோதும்,
அரச அதிபர் உண்மையைக் கூறிய போதும்,
உணரவேயில்லை,
அரச வான்படை யாழ்ப்பாணத்தில்
அப்பாவிகளையே கொல்கிறது என்பதை.

அவரது குழப்பம் வெளிப்படுகிறது,
அவர் சொந்த மக்களுக்கு எதிரான
அநியாயப் போரில்,
அப்பாவிகளைப் பட்டினிக்குப் பலியிடும்,
பொருளாதாரத் தடையில்;
வைத்தியசாலைகளோ,
பேசவே வேண்டாம்,
அவை வாடுகின்றன மருந்துகளின்றியே
அறிவித்துள்ளார் அவரின் தளபதி,
ஆக்கிரமிக்கையில் யாழ்ப்பாணத்தை இராணுவம்,
அழிவர் பொதுமக்கள் இரண்டாயிரத்திற்கு மேலாக என்று
சொல்லவும் வேண்டுமோ?
இரண்டாயிரம் என்பது இருபதுனாயிரம் என்று.

பேசவே வேண்டாம்,
கலைகள் எனும் சரஸ்வதி கோயில்,
நற்றிச் சின்னமுடை தமிழ்க் கல்வியின் இரத்தினம்,
பலவாண்டு கால அறிவின் பயன்பாடு,
பாதுகாப்புடைக் கோட்டை,
அனைத்தும் தமிழரின் உள்ளம் கவர்ந்த,
இனிய யாழ்ப் பல்கலைக்கழகம் பற்றி:
அது,
அவரின் குழப்பத்தின் பயனாய்,
ஆயிரக்கணக்கில் அகதிகள் தங்கும்
முகாமாய் ஆனது.

பேசவே வேண்டாம்,
அவமதிப்புகளுக்கும் சாடலுக்கும் உட்பட்ட
அகதிகள் பற்றி.

இரக்கமற்ற மனிதக் கடத்துனரால்,
இரஷ்யா, பால்டிக் நாடுகளிலிருந்து,
இளம் பெண்களும், குழந்தைகளும்
இருண்ட கப்பல்களில் அடைபட்டு,
இனிதற்ற குளிர் நீரை உறிஞ்சி,
இனிய சுவிடனின் நீண்ட கரைகளில்,
இறக்கப்படுவர்.
இதுவும்,
இந்தச் சந்திரிகாவின் குழப்பத்தின் விளைவே.

பேசவே வேண்டாம்,
கொழும்பு வாவிகளிலும், பல்கொட குளத்திலும், தியவன்ன ஆற்றிலும்
அலைந்து சென்ற தமிழர் உடல் பற்றி,
அம்மா, அப்பா, அன்புச் சகோதரரின்
அருகாமையை முன்னர் உணர்ந்த
அத் தமிழ் வாலிபர்,
இராணுவம், காவல் கொமாண்டோ, விசேட கடமைப் படை என்று
அறியப்படும்,
இரத்த வெறி கொண்ட இராட்சதரால்,
இரத்தம் வெளிப்படத் தாக்கப்பட்டு, கடத்தப்பட்டு, வதைக்கப்பட்டு,
பாலியல் உறுப்புகள் அறுக்கப்பட்டு,
பட்டினியாலும், மூர்க்கமான தாக்குதலாலும்,
படுகொலை செய்யப்பட்டு,
இறப்பதன் முன் கண்களும் சிறுநீரகங்களும்
அகற்றப்பட்டு, முடமாக்கப்பட்டு, முண்டமாக்கப்பட்டனர்.
அழுகிய நிலையில்,
அவர் உடல்கள் ஆறுகளில் மிதந்தன.
திருமதி சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா,
இந்த இராட்சதருக்கு மாபெரும் தலைவி;
இக் கொடுமைகள் நடந்ததோ,
அவர் கண்காணிப்பில் உள்ள பகுதியில்;
இதுவும்,
அவரின் குழப்பத்தின் விளைவே.

மேலும்,
நிறையவே உள்ளனர்,
அடையாளம் மறைக்கப்பட்ட சிங்களக் கொலைஞர்;
அவர்கள் 1983 ஆடியில்,
அழித்தனர் தமிழரைத் திட்டமிட்டே,
'பாபிய் யார்', 'சொங் மீ' இல் நடந்தது போல.
நிலை நிறுத்துவாரா நீதி
இந்தச் சந்திரிகா;
அல்லது,
இக் குழப்பத்தின் விளைவாக,
இரத்தக் கறை படிந்த இக் கொலைஞர்களை
இலகுவில் மறந்து, மன்னித்து விடுவாரா?

அவர் முன்னேறுது,
இரத்தக் கறை படிந்த குற்றச் சுமை போல,
சந்திரிகாவின் குற்றச் சுமை,
ஏறுவதன் முன்,
கடவுளே!
தொலைந்து போன உயர் கொள்கைகளை
நினைவூட்டி,
எங்கள் நண்பன் விசயவின் நினைவுச் சின்னத்தால்,
அவரைத் தாக்குவாய்;
ஏற்கனவே,
சொரிகிறது குருதிக் கண்ணீர்,

அவரது சுது நெலும
விசய குமாரணதுங்காவின் தைரியத்தின் நினைவு,
அகற்றட்டும்,
அவரது குழப்பத்தை;
தமிழருக்கு ஒரு சதமேனும் வழங்க விரும்பாதவரால்,
கோழைத்தனமாக,
கொலை செய்யப்பட்ட,
கணவர் விசய குமாரணதுங்கா
அமைத்த பாதையில்,
அவர் விட்ட இடத்திலிருந்து,
சந்திரிகா
நடக்கத் தொடங்கட்டும்,
தனது மனதைத் தெளிவுபடுத்தி.

அவரது தெளிவு பெற,
இறந்த கணவர் திரு விசயகுமாரணதுங்கா
இன்றிருப்பின்,
ஒரு சதத்திற்கேனும் மதிக்க விரும்பாத,
அதிமூர்க்கர் உள்ள,
இராகுவர்கள், தயான்கள், பன்னசிங்கரகள், டம்புலஎ தேரர்கள்
போன்ற சிங்கள வகுப்பினால்,
உள்ளம் குழப்பப்பட்ட காரணத்தால்,
திருமதி சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா
அமைதியை ஏற்படுத்த
தவறினும் கூட,
அவர் கணவர் திரு விசயகுமாரணதுங்காவின்
நினைவு,
கடவுளே! உனது அருளால்
என்றும் நிலைக்கும் என்பதையும்,
தமிழர் நினைவிலிருந்து என்றும் மங்காது என்பதையும்,
என்றும் நிலையாக நிற்கும் நினைவுச்சின்னமாகிவிட்ட
அவரது கல்லறை, அவரது நடுகல்,
எதிர் காலத்தில்,
ஏற்றமிகு தமிழர் சிங்களருக்கு இடையில் நல்லுறவு
ஏற்படலாம் என்ற,
எதிர்பார்ப்பிழந்த நிலைக்கு எதிராக நம்பிக்கையை
என்றும் எழுவிக்கும் என்பதையும்,
அவருக்கு அறிவுறுத்துவாய்.

கடவுளே!
தயவு செய்து தெளிவுபடுத்துவாய்,
திருமதி சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்காவுக்கு,
அவரது போர் பயனற்றது என்பதை:
கலைகளைக் கொல்ல முடியாது,
யாழ்ப்பாணத்திலுள்ள
பனைமரங்களையும் முறிக்க முடியாது.

The poem is about the armed assault on Yālppānam (Jaffna) that started in October 1995 by the Sri Lankan Armed Forces with the intentions to establish by force a »Sinhala peace«. The poem is a prayer to the highest god known in Tamil culture, known by the epithet *katavul*, probably meaning »the one who is beyond«. The *katavul* is requested to guide the President of Sri Lanka, who is responsible for this war against the armed and unarmed Tamil resistance movements and civilians in Yālppānam, to find a negotiated peace, and to enlighten the President about the vanity of this war.

The palmyra is a symbol for Yālppānam itself. To it are ascribed 801 uses. It is dedicated to the god Vināyakar. The tree on the cover page is shown rising vertically to its full height without curve and deviation. The broad fan like leaves are gracefully arranged round the crown of the tree, with patches of colour to indicate the clusters of fruit. The design also exhibits one of the peculiar features of the tree and minutely shows the stalks which remain for many years attached to the trunk after the leaves have decayed. The palmyra palm was so impressive that it was chosen even by the Dutch Commandement in Yālppānam in the 18th century as device for their coat of arms. Source: R K de Silva, W G M Beumer, *Illustrations and Views of Dutch Ceylon 1602-1796* (Leiden: Brill), p. 301.

The attempt by the Sri Lankan Armed Forces to break the palmyra will never succeed.

Composed, edited and issued, November 1995,
by Peter Schalk
Rödbetsgatan 17
75449 Uppsala
Sweden
Peter.Schalk@relhist.uu.se
Fax 46 18 241786
Phone 46 18 252682

Subscription/yr/6 issues:: Scandinavia:90,-NKr;Srilanka/India:6USD;U.K.:6£;France:30Fr;Germany:12DM;
Canada:10CD;Swiss:12Fr;Australia:12AD;K.S.A.:20SR;Singapore/Malaysia:12SD;Others::10 USD
Postgiro:0823 0899 453 ,Postbanken,0021 Oslo Bankgiro:6066 1012 199,kredit kassen bank,3000 Drammen



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப்பூக்கள்

## 9

மாலைச் சாப்பாடு முடிந்துவிட்டது. காலில் கௌசிரி வந்தமர்ந்தாள். வேந்தன் அறைக்குள் சென்று பாடங்களைப் படிக்கக்கூற அவள் எழுந்து மறைந்துவிட்டாள். கௌசிரி கரையவும் அனு சமையல் அறையில் இருந்து பிரசன்னமாகினாள். வேந்தன் அவளைக் கூப்பிட்டு தனக்கு முன்னால் இருந்த சோபாவில் இருக்குமாறு பணித்தான். எதற்காக இந்த ஏற்பாடு என்பதை அனு புரிந்து கொண்டாலும் அதற்காக பெரிதும் அலட்டிக் கொள்ளாது ஒருவித இறுமாப்புடன் இருந்தாள். அன்று சொன்னதைவிட இன்று என்ன சொல்லப் போகிறார்கள்? ஏதாவது வித்தியாசமாய் சொல்லுவார்கள். வேறு என்ன செய்ய முடியும்? நடப்பது நடக்கட்டுமென ஒருவித பிடிவாதத்தை துணைக்கழைத்துக் கொண்டாள்.

அடுக்களைவேலையை முழுமையாக முடிக்காமலே சியாமிழியும் அன்னமும் கோலுக்குள் வந்துவிட்டனர். எல்லோரும் கூடியபோதிலும் ஏனோ அங்கு அமைதிதான் பேசிக் கொண்டிருந்தது. அமைதியை எதிர்த்து யார்முதலில் பேசுவது என்பது சிறிது நேரம் கேள்விக்குறியாகியது. பின்பு அதற்குப் பதிலளிப்பதுபோல வேந்தனே முதலில் பேசத் தொடங்கினான்.

அனு உன்ன நல்ல பிள்ளையெண்டு நினைச்சுத்தான் அண்டைக்கு அவ்வளவு நேரம் மினக் கெட்டு புத்திமதி சொன்னான். என்ர பிள்ளை என்ர சொல்ல தட்டாது எண்டுதான் நான் நம்பினான். ஆனா நீ அதையெல்லாம் துக்கி எறிஞ்சிட்டா. நான் அவ்வளவு நேரம் ஓதினதெல்லாம் செவிடன் காதில ஊதின சங்காப் போச்சு. இதுவரைக்கும் எங்க குடும்பம் யாருக்கும் அடிபணியாம , வெக்கப் படமா , மானம் மரியாதையோட தலைநிமிர்ந்துதான் வாழ்ந்திருக்கு. உனக்கு இப்ப இதையெல்லாம் சிந்திக்கிற வயசு வந்திட்டதால நாங்க அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்ல. இப்பவும் நான் ஒண்டத்தான் சொல்லேலும். நடந்ததையெல்லாம் மறந்திட்டு இனி அந்தப் பெடியனோட கதைக்காம இரு. அதுதான் எல்லோருக்கும் நல்லது.

சியாமிழியும் அன்னமும் அமைதிகாத்தனர்.

நீ எனக்கு "நான் இனி அந்தப் பெடியனோட கதைக்க மாட்டன் " எண்டு உன்ர அம்மாமேல சத்தியம் பண்ணிக்கா.

இது அனு சற்றும் எதிர்பாராத ஒருபணியாதலால் சிறுகணம் திகைத்துப் போய்விட்டாள். அம்மாமீது சத்தியம் செய்தால் நிட்சயம் நான் இனி ஸ்தீக்குடன் கதைக்க முடியாது. இல்லை. ஒருபோதும் இல்லை. என்னால் அவனுடன் கதைக்காமல் இருக்க முடியாது. இந்தச் சத்தியத்தையும் என்னால் பண்ணமுடியாது.

என்ன அனு? நான் சொல்லுறது விளங்கேல்லேயே ? பேசாம இருந்தா என்ன அர்த்தம். அம்மாமேல சத்தியம் பண்ணீட்டு போ . எனக்கும் வேற வேல இருக்கு.

வேந்தனின் குரலில் எரிச்சல் ஏக்காளமிட்டது.

முடியாதப்பா. இந்தச்சத்தியம் பண்ணமுடியாதப்பா. இந்தச் சத்தியம் பண்ணினா நான் செத்துப் போயிடுவனப்பா. சொற்களூடே அழுகை வெடித்துக் கொண்டது.

அன்னம் பொறுமை இழந்து பத்திரகாளியாய் மாறிக் கொண்டிருந்தாள்.

என்னடி சொல்லுறா? எதிர்த்தாடி பேசுறா? மரியாதையா அப்பா சொல்லுறத கேள் . இல்லாட்டி கோவம் வந்தா கால கைய முறிச்சு மூலையில வேட்டிடுவன்.....ம்......

கத்திவிட்டு பல்லுநரம்பலுடன் அனுவை நோக்கி முன்னேறிய அன்னத்தை வேந்தன் தடுத்தான்.

அன்னம்.......அன்னம் நீ சும்மா இரு. எனக்கு தெரியும் அவளோட எப்பிடிக் கதைக்கோணுமெண்டு. நீ சும்மா ஆத்திரப்படாமல் போ . போய் கிச்சின் வேலைய பார். போ.

கணவனின் வார்த்தை கோபத்தை தந்தது என்பது எவ்வளவிற்கு எவ்வளவு உண்மையோ, அதைப்போலவே பொறுமையைத் தந்தது எனக்கூறினால் முழுப் பொய்யாகும். அன்னம் அனுவையும் , வேந்தனையும் வெறித்துப் பார்த்தவண்ணமே அடுக்களையை நோக்கிச் சென்றுவிட்டாள்.

வேந்தன் மனது வெந்து கொண்டது. சொந்தமகளையே தட்டிக் கேட்கமுடியாத நாடும் ஒருநாடா? இதில் நாங்கள் தொடர்ந்தும் வாழ்வதா? அப்படி வாழ்வதென்றால் எவ்வளவு சிக்கல்கள் உண்டாகும்? ஊராய் இருந்தால் இந்தக் கழுதை எதிர்த்துப் பேசுவதற்கு இரண்டு தட்டுத் தட்டி மூலையில் இருத்தி வைக்கலாம் அல்லவோ? ஆனால் இந்த நாட்டில என்ன செய்யமுடியும்? எல்லாவற்றுக்கும் கையைக் கட்டுவதுபோல சட்டம் , சட்டம் என்கிறார்களோ?

அகிம்சையால் ஏதாவது செய்தால் தான் உண்டு. மற்றும்படி எதுவும் செய்ய இயலாது. கெட்டதிலும் ஒரு நல்ல காலம் என்பது போல் அனுவுக்கு பதினெட்டுவயது முடியாமை வேந்தனுக்கு ஒருவித நின்மதியைத்தந்தது. இந்தப் பதினெட்டைத் தாண்டுவதற்குள் இதற்கு ஏதாவது முடிவெடுத்தாக வேண்டும். அதைத் தவற விட்டால் பின்பு எக்காலத்திலும் இவளைக் கட்டுப் படுத்தவே முடியாமல் போய்விடும். கட்டுப் படுத்த வேண்டும் என்பது புரிந்தாலும் எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது புரியாத புதிராய் இருந்தது.

வேந்தன் தன்னிலையை உணர்ந்து சிந்தனைகளை மூட்டை கட்டிவைத்துவிட்டு அனுவுடன் மீண்டும் மென்மையாகக் கதைக்கத் தொடங்கினான்.

அனு இது உனக்கே நல்லா இருக்கா? அப்பா அம்மாவ இப்பிடி வேதனைப்படுத்திறது உனக்கே நல்லா இருக்கா?

நான் என்னப்பா வேதனைப் படுத்திறன்? நான் காதலிக்கிறது ஏனப்பா உங்களுக்கு வேதனையா இருக்கு? என்ர விருப்பத்துக்கு இடமே இல்லைப்பா?

அனு நீதான் ஒரு பிள்ளையா இருந்தா எங்கட குலம் கோத்திரம் அந்தஸ்து எல்லாத்தையும் விட்டுட்டு நீ விரும்பினவனையே உனக்கு கட்டி வைச்சிருக்கலாம். ஆனா நீ எங்களுக்கு ஒரே ஒரு பிள்ளை இல்லையே. உனக்கு மூத்தஅக்கா சியாமிழிக்கு ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டாமோ? அதைவிட உன்ர தங்கச்சி? எல்லாத்தையும் யோசியம்மா. நீ அவனோட தொடர்பெண்டாலே ஒருத்தன் பெண்கேட்டு எங்கட வாயில்படி மிதிக்கமாட்டான். எல்லாரையும் மூலையில குந்தவைச்சிட்டு நீமாத்திரம் வாழோணும் எண்டு நினைக்கிறியா அனு?

சியாமிழி எதுவும் பேசவில்லை என்றாலும் அவளுக்கு அப்பா கூறும் விடயங்கள் முழுக்க முழுக்க நியாயமானதாகவே தோன்ற அவள் அப்பாவின் கருத்துக்களை மனதிற்குள் அப்படியே ஆதரித்தாள். அன்னம் மனதிற்குள் குமைந்து கொண்டு வேலைகளைச் செய்தாள்.

மறந்திடு அனு. . நானுனக்கு அடுத்தவருசம் இல்லாட்டியும் அதுக்கடுத்தவருசம் கலியாணம் செய்து வைக்கிறன் . ஊரில நல்லமாப்பிளையா , படிச்சவனா எந்தச் சிக்கலும் இல்லாமல் ஒருநாளைக்கு ஊரிலபோயும் கௌரவமா வாழக் கூடியதா , நல்ல இடத்திலபாத்து நான் பிள்ளைக்கு கலியாணம் செய்து வைக்கிறன். நீ நல்ல பிள்ளையாட்டம் உந்தப் பெடியனோடை யெல்லாம் கதைக்காம இருக்கிறதோட அவன இனி நீ நினைக்கவும் கூடாது.

முடியாதே அப்பா. அவன நினைக்காம இருக்க என்னால முடியாதே அப்பா? அவனை எப்பிடியப்பா என்னால மறக்கமுடியும்? வேணுமெண்டா ஒண்டு செய்யலாம்ப்பா. நான் காத்திருக்கிறன். அக்காவின்ரையும் தங்கச்சின்ரையும் கலியாணம் முடிஞ்சபிறகு நான் அவனைக் கட்டிக்கிறன்.


Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேந்தனுக்கு இப்போது அதிக கோபத்தோடு சலிப்பும் தொற்றிக் கொண்டது. "இவள் என்ன எதற்கெடுத்தாலும் விட்டுக் கொடுக்காது பேசுகிறாள்? இப்படியே இவளுடன் பேசிக் கொண்டிருப்பதில் ஏதாவது அர்த்தம் உண்டா? அர்த்தமில்லை என்றால் இனி என்ன முடிவெடுப்பது?" புரியாமல் போகவே எழும்பி இரண்டு மொத்து மொத்த வேண்டும் போல்த் தோன்றியது. அப்படிச் செய்வதால் விபரீதம் விளையக்கூடும் என எண்ணி அப்படிச் செய்யாது தன்னைக் கட்டுப்படுத்தினார். கோபம் மாத்திரம் எரிமலையாகி , வார்த்தைகளாக வெடித்தது.

அனு இந்தாபாரடி. நீ கலியாணம் நடத்திறத்துக்கு சேச்சுக்குள்ள போறத்துக்குள்ள எங்கட பிணம் சேச்சுக்க இருக்கும் . அதைத்தாண்டித்தான் நீ போகோனும். அப்பிடிபோய் நல்லாயிரடி . போடி போ. என்ர கண்ணுக்கு முன்ன நிக்காமல் போ.

கோபம் கண்களைச் சிவந்த கோளங்களாக்கியது. தன்னிலையைக் கட்டுப் படுத்த முடியாதவனாய் வேந்தன் சென்று படுக்கையில் விழ்ந்தான்.

உன்னத் திருத்தேலாதடி. நீ அப்பாவையும் அம்மாவையும் விழுங்காம விடமாட்டியடி. வெந்தபுண்ணில் வேல்பாச்சிச் சென்றாள் சியாமிழி.

அனுவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அனு அழுதாள். தேம்பித் தேம்பி அழுதாள். அன்னம் படுக்கையறையில் இருந்து எட்டிப் பார்க்கும் போது பதினொரு மணியாகி இருந்தும் அனு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். அன்னத்திற்கு அனுவின் அழுகையை தடுக்க விருப்பமில்லை . அழுதழுது அவளால் விளையப் போகும் கேட்டைச் சிந்திக்கட்டுமென விட்டுவிட்டாள்.
அனுவினால் தோன்றிவிட்ட கவலை அந்த வீட்டை அனுருண்டாய்ப் பயமுறுத்தியது. வேந்தனை வேதனை வாட்டி எடுத்தாலும் அன்றாட வாழ்க்கைமாத்திரம் எப்படியோ பாதிக்கப் படாது நடைபெற்றுக் கொண்டிருந்தது. கவலை, சுமையாய் மனதை அழுத்திய போதிலும் அன்னமும் வேந்தனும் வேலைக்குப் போவதை நிறுத்தி விடவில்லை.

எல்லா மனிதர்களும் ஒரேமாதிரி இருக்கமாட்டார்கள் . ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொருவிதமாய் இருப்பான் . இதில் மிகவும் உண்மை இருக்கத்தான் செய்தது. நாம் ஒருவிடையத்தைப் பற்றி ஒருவருடன் கதைக்கும் போது கதைக்கும் விடையத்திற்கும் அவருக்கும் என்ன தொடர்பு உள்ளது என்பதையும், இந்த விடையத்தை அறிந்தபின்பு அதனால் என்ன விளைவு உண்டாகும் என்பதையும் புரிந்தே கதைக்க வேண்டும். நாம் அன்றாட வாழ்க்கையில் செய்யும் தவறு கதைக்க கூடாத ஒருவரிடம் , தெரியக்கூடாத விடையத்தை உளறிக் கொட்டிவிடுவதுதான். இப்படியான சந்தர்ப்பங்களில் அனேகமாக எமக்கு பாதிப்பே உண்டாவதுண்டு. பலருக்கு நன்மையபக்கும் ஒன்றால் பாதிப்பு உண்டானாலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். எவருக்குமே நன்மை தராத ஒன்றால் பாதிப்பு, ஏற்படுவதென்றால் அது மனவருத்தத்திற்கு உரியதொன்றனதாய்த்தான் இருக்கும்.

வேந்தனுக்கு மனவேதனை மலைபோலக் கனத்தது. யாரிடமாவது கொட்டித் தீர்த்தால் கொஞ்சம் நின்மதியாய் இருக்குமெனத் தோன்றியது. அதைக் கோபாலோடு தீர்ப்பதென முடிவு செய்தார் . அதற்காக மதிய உணவு இடைவேளையின் போது தமது தொழிற்சாலைக்கு எதிரே இருந்த சிற்றுண்டிச் சாலைக்கு அவனை அழைத்துச் சென்றார்.

இருளும் ஒளியும் ஒரே இடத்தில் இருக்க முடியுமா என்று உங்களைக் கேட்டால் இல்லைஎன வரிந்து கட்டிக்கொண்டு விவாதத்திற்குப் புறப்படுவது எனக்குப் புலப்படுகின்றது எனினும் இந்த சிற்றுண்டிச் சாலையில் இருளையும் ஒளியையும் உறவாடத்தான் விட்டிருந்தார்கள். மங்கிய அந்த ஒளியிலே ஆளுக்கொரு கோப்பியை எடுத்துக் கொண்டு , ஒரு மூலையில் சென்று காலிற்கு ஓய்வு கொடுத்தனர். மேசையில் அமர்ந்தபின்பு அமைதியை முதலில் வதைத்தது வேந்தன்தான்.

ஒரே தலையிடியப்பா.

ஏன் ஏதாவது பில்ஸ் போடலாமே?
வேந்தனுக்கு கோபாலின் புரிந்துணர்வை எண்ணும்போது அவன் இருந்த மனநிலையிலும் சிரிப்பு வந்தது.
நான் அதைச் சொல்லேல்ல. வீட்டில இருக்கிற தலையிடியச் சொன்னன்.
உங்க வீட்டிலயா?
ம்.........
உங்க உள்வீட்டு பிரச்சன.........................எனக்கேன்.......
..........

**காரையூரான்**

ச்.........யாரிட்டயாவது சொன்னாத்தான் நின்மதியா இருக்கும் போல இருக்கு.
அப்ப சொல்லுங்க என்னால ஏலுமான உதவிய செய்யிறன்.
எல்லாம் நீ அனுவப்பற்றி சொன்ன விசயம்தான்.
என்னவாம் அனு?
அவள் அடம்பிடிக்கிறாள். அவன மறக்கேலாதாம்.
நல்லா புத்திமதி சொன்னீங்களா.
ஓமடா. ஓண்டுக்கு பத்துத்தரம் சொல்லிப் பாத்தாச்சு. ஆனா அவள் எதுக்கும் மசிறாள் இல்லையடா.

கோபாலின் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு என்ன அர்த்தம் என்பது புரியவில்லை. கோபால் மனதில் அனுவின் காதலை இவர்களால் இனிப்பிரிக்க முடியாதெனவும் , பிரிப்பது சுலபமில்லை எனவும் , இதைச் சண்முகத்திற்கு எழுதாவிட்டால் தன்னை துரோகி என அவர்கள் தூற்றுவார்கள் எனவும் , முடிவு செய்து கொண்டான். அவர்களின் ஆச்சார அனுஷ்ட்டானங்களுக்கு இவர்களிடத்தில் சம்பந்தம் வைத்துக் கொள்வதே பெரியவிடையம். அந்த வள்ளல்ல இவள் இப்படிப் போனால் நிட்சயம் ஒருபோதும் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்தக் கலியாணத்த செய்து வைச்சு நான் ஏன் அவர்கள் பகையைத் தேடிக் கொள்ள வேணர்டும் முடிவு பண்ணியவனாய் வேந்தனை பார்த்தான். வேந்தன் தன்னையே பார்ப்பதை உணர்ந்து தானே வலியக் கதைத்தான்.
அப்ப என்ன செய்யிறதா உத்தேசம்?
கைநீட்டி அடிச்சுக்கிடிச்சும் கட்டுப்படுத்தேலாது. ஊருக்கும் போகேலாது. என்ன செய்யிறதெண்டே புரியேல்ல.
செரியண்ண நேரமாகுது. எதுக்கும் திரும்பத்திரும்ப றைபண்ணிப் பாருங்க. அடிமேல் அடியடிச்சா அம்மியும் நகரும் எண்டு சொல்லுவாங்க. நீங்களும் றைபண்ணிப் பாருங்க. சிலவேளை பலன் கிடைச்சாலும் கிடைக்கும். இதைவிட என்னால என்னத்த சொல்லேலும்.
கூறியவண்ணம் கோபால் எழுந்துகொள்ள அவனுடன் சேர்ந்து வேந்தனும் எழுந்து சென்றான்.

கோபாலின் மனது பலவிதங்களில் போட்டி , வாதிடப் , பார்த்தது. ஆனால் அவன்மனது முடிவாக இந்த விடையத்தை சண்முகத்திற்கு ஓதிவிடுஎனக் கட்டளையிட்டது . அவன் அதன்படி செயற்படத் சித்தமாயினான். வேந்தன் எவரிடம் இந்த விடையத்தை கூறி இருக்கக்கூடாதோ அவரிடமே எல்லாவற்றையும் உளறிக் கொட்டிவிட்டு அதன்விளைவு தெரியாது தன்வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

( வளரும் )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ISSN:0805-7443 SARVADESA TAMILER 15,-Nkr Vol.2;Nr.9;Nov.-Dec.1995

# C-BLAD

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A,3035 Drammen,Norway.
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no

## *My name is Tamil child*

*When I was in my mothers little womb*
*I had ambitions to live in the world*
*Once I thought whether I should be born?*
*I took a chance to come into the world*

*Black thick dark clouds covered all star*
*at that time censorship came*
*Blinking all sky with shell fire*
*At that time it was nearly midnight*
*hundreds of thousands of people on the street*
*only one route for passage to hell*

*Born as a Tamil child I was proud*
*The day I left to carry my soul!*
*I cried and cried till my eyes were dry*
*when the army shelled my home*
*my little heart was beating fast*
*how can I tell you it was such a throb*

*Elderly left behind, able-bodied ran away*
*Disabled in the third world wheel chair*
*who got the power to push for safety*
*All became malnourished over the past five years*
*I wonder whether I've got x ray eyes*
*such a skeletal movement in the land*

*Difficult for me to recall my mind*
*Number of shells were more than rain shower*
*mixture of both make me serious*
*Capture of Jaffna may be possible*
*Capture of Tamil's heart definitely impossible*

*What a gene research in micro world?*
*Did you know genocide in macro level?*
*Such a black world where we live!*
*Why do media hide their news?*
*Could you save our lives in the world?*
*Let us have a chance for peace?*

*Oh UNable to save Tamil child why?*
*I know why?*
*you wait UNtil everyone dies!*
*Oh UNable to learn a lesson from the past*
*Rwanda and Somalia make me fear*
*UNaccountable bodies in the African land*
*Such a pain how can I bear?*
*UNcle Sam what do you say?*

*Oh God! you too UNaware of our hell*
*come to the Tamil's land paradise's(Sri Lanka's) hell*
*Only I need for you to raise your voice*
*to bring the peace to my land*
*What a mankind?*
*what an UNcivilised world?*

*SA Varathan*

## உலகநாடே திருப்பிப்பார்..........

உலக நாடே கண்ணைத் திற
உறங்கி யது போது மினி
ஒரு கணம்நீ கண்ணைத் திற
ஒதுங்க ஒரு இடமு மின்றி
ஓல மிடும் தமிழி னத்தை
ஒரு கணம்நீ திரும்பிப் பார்
அரக்கர் களின் அசுரத் தனத்தால்
அகதி களாய் எங்க ளினம்
அல்லல் படும் துயர் நிலையை
ஒரு கணம்நீ திரும்பிப் பார்
மாட மாளிகை கூட கோபுரம்-நாம்
மமதை யுடன் கேட்க வில்லை
அடை மழையில் மர நிழலில்
அகதி களாய் வாடு கிறோம்
பட்டி னியால் சாக டித்து
குண்டு மழை பொழிகின் றாரே-சிங்கள
அரக்கர் களை நிறுத்தச் சொல்லி
ஒரு கணம்நீ உத்தர விடு-உனை
கை கூப்பி இறைஞ்சு கிறோம்
ஒரு கணம்நீ திரும்பிப் பார்
பட்டி னியால் வாடி நிற்கும்
ஒட்டிய எம் வயிற்றி னிற்கு
ஒரு பிடிநீ உணவு போடு
உள்ள ளவும் மறக்க மாட்டோம்-என்று
செங் குருதி மீது நின்று
செஞ் சிலுவை தடு மாறுது
அரக்கர் களின் கொடுமை கண்டு
அவதி யுற்று நிற்கின் றது
உண்ண ஒரு உணவு மின்றி
உறங்க ஒரு இடமு மின்றி
ஓல மிட்டுக் கதறு கிறோம்
ஒரு கணம்நீ திரும்பிப் பார்
பட்டி னியால் வாடி யிங்கு
தொட்டி லிலே மடியும் எங்கள்
குட்டி யிளம் பிஞ்சு களை
ஒரு கணம்நீ திரும்பிப் பார்
மனித உரிமை பேணு கின்று
மன்றங் கள்நீ வைத்தி ருக்காய்-யாருக்கு
செல்வ முள்ள நாடு கட்கும்
வெள்ளை நிறத் தோலுக் குமா????
எம்மை யும்நீ மனித ராக
ஒரு கணம்நீ திரும்பிப் பார்.

ஆக்கம்
பொன். சிவா
லகர்சுண்ட், நோர்வே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்